SHANKAR IAS ACADEMY™

THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)



## அறிஞர் அண்ணா

SHANKAR IAS ACADEMY

AP-2241, 2nd Floor, 12th Main Road,

Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.

www.shankariasacademy.com

Email : tnpscfeedback@shankarias.in

https://t.me/tamilexammaterials

ZERO Current Affairs 0% Effort 100% Results
SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 1. அறிஞர் அண்ணா

### தொடக்கக் காலம்:

- சி.என். அண்ணாதுரை (Conjeevaram Natarajan Annadurai) அவர்கள் செப்டம்பர் 15, 1909 - இல் காஞ்சிபுரத்தில் ஒரு ஏழை நெசவாளர் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை நடராஜனார், தாய் பங்காரு அம்மாள். இவர் தனது சிற்றன்னையான இராசாமணி அம்மையாரிடம் வளர்ந்தார்.
- இவர் காஞ்சிபுரம் பச்சையப்பன் பள்ளியில் பயின்றார்.
- இவர் 1927 இல் காஞ்சிபுரம் நகராட்சியில் **எழுத்தராகப்** பணியாற்றினார்.
- இவர் 1930 இல் இராணி அம்மையாரை மணந்தார்.
- இவர் முதன்முதலாக எழுதிய **'பெண்கள் சமத்துவம்'** என்னும் கட்டுரையானது **மாசிலாமணி முதலியார்** வெளியிட்டு வந்த **'தமிழரசு'** என்னும் இதழில் 1931- ஆம் ஆண்டு வெளிவந்தது.
- இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ (ஹானர்ஸ்) பட்டமும், பிறகு எம். ஏ (பொருளாதாரம் மற்றும் அரசியல்) பட்டமும் பெற்றார்.
- இவர் சென்னையில் உள்ள **கோவிந்தப்ப நாயக்கர்** பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினார்.

### பொது வாழ்க்கை:

- பேராசிரியர் **வரதராஜனும்**, நீதிக்கட்சியின் **வெங்கடசாமியும்** முக்கியமான மூன்று கருத்துகளை அண்ணாவுக்கு அறிமுகப்படுத்தி அவர் பொதுவாழ்வில் ஈடுபட காரணமாக இருந்தனர். அந்தக் கருத்துகள்:
  - சமூக நீதி
  - பிராமணரல்லாதார் முன்னேற்றம்
  - அரசியல் கட்சி மூலம் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவது
- இவர் சாதி ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையுடன் நீதிக்கட்சியில் 1934 - இல் முறைப்படி சேர்ந்தார். இதற்கு **அரசியல் இரட்டையர்களான** 'சண்டே அப்சர்வர்' இதழ் ஆசிரியர் **பி. பாலசுப்பிரமணியனும்**, நீதிக்கட்சியின் 'ஜஸ்டிஸ்' இதழ் ஆசிரியர் **டி.வி. நாதனும்** உடனடிக் காரணமாக இருந்தனர்.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilasexammaterials

- அண்ணா அவர்களின் முதல் சிறுகதையான **‘கொக்கரக்கோ’**, 1934 ஆம் ஆண்டு ஆனந்த விகடனில் வெளியானது.
- இவர் **திருப்பூரில்** நடைபெற்ற செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் முதல்முறையாக பெரியாரை சந்தித்தார்.
- இவர் 1936 இல் சென்னை மாநகராட்சிக்குப் **பெத்துநாயக்கன்பேட்டைத்** தொகுதியிலிருந்து போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார்.
- **பாசுதேவ்** நடத்தி வந்த **பாலபாரதி** என்ற இதழை நடத்தும் பொறுப்பு 1936 – ஆம் ஆண்டு அண்ணாவுக்கு அளிக்கப்பட்டது.
- அண்ணா அவர்களின் முதற்கவிதை ‘காங்கிரசு ஊழல்’ என்ற தலைப்பில் 1937 ஆம் ஆண்டு ‘விடுதலை’ ஏட்டில் வெளியானது.
- 1937 இல் திருச்சி மாவட்டம் **துறையூரில்** நடந்த சுயமரியாதை மாநாட்டிற்கு அண்ணா தலைமை தாங்கினார்.
- ‘காஞ்சி’ **மணிமொழியார்** வெளியிட்டு வந்த **நவயுகம்** இதழின் துணை ஆசிரியராக இவர் 1937- இல் பணியாற்றினார்.
- அண்ணா ஈரோடு சென்று பெரியார் நடத்தி வந்த குடி அரசு மற்றும் விடுதலை இதழ்களின் **முழுநேர துணை ஆசிரியராகப்** பொறுப்பேற்றார்.
- சென்னை மாகாண முதலமைச்சர் இராஜாஜி, தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் இந்தி பாடத்தை கட்டாயமாக்கினார். இதற்கு கடுமையாக எதிர்ப்பு கிளம்பியது. 1938 – இல் நடைபெற்ற முதலாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, அண்ணா **முதல் முறையாகச் சிறை சென்றார்**. (நான்கு மாத சிறைத் தண்டனை).
- 1938 ஆம் ஆண்டு முதல் **‘பரதன்’** என்ற பெயரில் பல்வேறு தலைவர்களுக்கு விடுதலை ஏடு வாயிலாக பகிரங்கக் கடிதங்கள் எழுதி வெளியிட்டார். மேலும் சௌமியன், ஒற்றன், சம்மட்டி, நக்கீரன், சமதர்மன், வீனஸ், வீரன், ஆணி, குறிப்போன் போன்ற பல புனைப் பெயர்களில் அண்ணா கட்டுரைகளையும், கதைகளையும், விமர்சனங்களையும், ஓரங்க நாடகங்களையும் எழுதினார்.
- 1939 - ஆம் ஆண்டு, அண்ணாவின் **முதல் குறும் புதினமான** ‘கோமளத்தின் கோபம்’ குடி அரசு இதழில் வெளியானது.
- இவர் 1939 இல் நீதிக்கட்சியின் **பொதுச் செயலாளர்** ஆனார். அப்பொழுது அதன் தலைவர் பெரியார்.

- காங்கிரஸ் தலைவராக இருந்த டாக்டர் வரதராஜுலு நாயுடு அண்ணாவை **'நீதிக்கட்சியின் மூளை'** என்று வர்ணித்தார்.
- 1940 ஆம் ஆண்டு, 'வீங்கிய உதடு' என்கிற இவரின் **முதல் புதினம்** குடி அரசு இதழில் வெளியானது.

## திராவிட நாடு கொள்கை:

- 1940 – ஆம் ஆண்டு பிப்ரவரி 24 - ஆம் நாள் திருவாரூரில் நீதிக்கட்சியின் மாநில மாநாடு கூடிற்று. இம்மாநாட்டில் **"திராவிட நாடு திராவிடருக்கே"** என்னும் கொள்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
  - இதை முன்மொழிந்தவர்: 'சண்டே அப்சர்வர்' இதழ் ஆசிரியர் **பாலசுப்பிரமணியம்.**
  - வழிமொழிந்தவர்கள்: **சி.பாசுதேவ், அறிஞர் அண்ணா.**
- அண்ணா 1942 –இல் தனது தோழர்களான டி.பி.எஸ். பொன்னப்பா, அங்கமுத்து, கணேசன் ஆகியோரின் ஆதரவுடன் **திராவிட நாடு** என்னும் இதழை காஞ்சிபுரத்தில் துவக்கினார்.
  - இந்த இதழ் வெளிவர பக்க பலமாக இருந்தவர்கள்: **இராம. அரங்கண்ணல், தில்லை வில்லாளன்.**
- 1943 இல் இவரின் **முதல் நாடகமான 'சந்திரோதயம்'** திருவத்திபுரம் லட்சுமி விலாஸ் அரங்கில் நடத்தப்பட்டது.

## இயக்க அரசியல்:

- 1944 ஆகஸ்டு 27 ஆம் நாள், **சேலத்தில்** நடைபெற்ற நீதிக்கட்சியின் **16 ஆவது மாநில மாநாட்டில்** அண்ணா அவர்களால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அந்தத்தீர்மானம்:
  - ஆங்கிலேய ஆட்சியாளர்களால் தரப்பட்ட சர், ராவ் பகதூர், திவான் பகதூர், ராவ்சாகேப் போன்ற கவுரவப் பட்டங்களைத் துறக்க வேண்டும்.
  - உள்ளாட்சி மன்றத் தலைவர், கவுரவ மாஜிஸ்ட்ரேட் பதவிகளிலிருந்து விலக வேண்டும்.
  - பெயர்களுக்குப் பின்னால் சாதிப் பெயர்களைப் போட்டுக் கொள்ளக்கூடாது.
  - **தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (நீதிக்கட்சி) என்ற பெயரை மாற்றித் திராவிடர் கழகம் என்ற பெயரிடப்பட வேண்டும்.**

- மேற்கண்ட தீர்மானம் ஆனது பெரும் விவாதங்களுக்கு பிறகு நிறைவேற்றப்பட்டது. இது **அண்ணாதுரைத் தீர்மானம்** என அழைக்கப்பட்டது. இதன்படி நீதிக்கட்சியானது திராவிடர் கழகம் என பெயர்மாற்றம் செய்யப்பட்டு அதன் **தலைவராகப்** பெரியாரும், **பொதுச் செயலாளராக** அண்ணாவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## படைப்புகள்:

| | | |
|---|---|---|
| நாடகங்கள் | : | ஓர் இரவு, வேலைக்காரி, சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்ஜியம், நீதிதேவன் மயக்கம், காதல் ஜோதி, பாவையின் பயணம், குமாஸ்தாவின் பெண், கொலைகாரியின் குறிப்புகள். |
| திரைப்படங்கள் (கதை - திரைக்கதை) | : | நல்லத்தம்பி, வேலைக்காரி, ஓர் இரவு, சொர்க்கவாசல். |
| புதினங்கள் | : | ரங்கோன் ராதா, கலிங்காராணி, பார்வதி பி.ஏ., தசாவதாரம், என் வாழ்வு, குமரிக்கோட்டம், வண்டிக்காரன் மகன், கடைசிக் கனவு, மக்கள் தீர்ப்பு, வெள்ளை மாளிகையில். |
| இதர நூல்கள் (கட்டுரைகள்) | : | ரோமபுரி ராணிகள், கம்பரசம், பெரிய புராணப் புதையல், பணத்தோட்டம், மாஜி கடவுள்கள். |

## தேர்தல் அரசியல்:

- டி.எம். பார்த்தசாரதி தொடங்கிய **மாலைமணி** இதழில் 1949 ஆம் ஆண்டு இவர் ஆசிரியராக பணியாற்றினார்.
- பெரியாருக்கும், அண்ணாவுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின.
- 1949 ஜூலை 9 ஆம் தேதி பெரியார் மணியம்மையை மணந்தார். இதனால் அண்ணாவும் அவருடைய ஆதரவாளர்களான ஈ.வெ.கி. சம்பத், நெடுஞ்செழியன், மு.கருணாநிதி, என்.வி. நடராசன் போன்ற முன்னணித் தலைவர்கள் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து சென்று 1949 செப்டம்பர் 17 ஆம் தேதி சென்னை - பாரிமுனையில் உள்ள பவழக்காரத் தெரு 7 ஆம் எண் இல்லத்தில் **('திருவொற்றியூர்' சண்முகத்தின் இல்லம்) 'குடந்தை' கே.கே. நீலமேகம்** தலைமையில் கூடி திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு புதிய கட்சியை தொடங்க உள்ளதாக அறிவித்தனர்.
- அன்று மாலையே **சென்னை ராபின்சன் பூங்கா** (ராயபுரம்) மைதானத்தில் கழகத்தின் தொடக்கவிழா நடைபெற்றது. **'பெத்தம்பாளையம்' பழனிச்சாமி** அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.
- அப்பொழுது தி.மு.க. வின் கொள்கைகளாக அறிவிக்கப்பட்டவை:



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterias

- சமுதாயச் சீர்திருத்தம்
- பொருளாதாரத்தில் சமதர்மம்
- அரசியலில் வடவரின் (வட இந்தியர்) ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறுதல்.

➤ அண்ணா அவரது கட்சியின் முக்கிய கொள்கை முழக்கமாகவும், அவரது கட்சியின் பண்பாடாகவும் **கடமை, கண்ணியம், கட்டுப்பாடு** என்னும் வார்த்தைகளை முன்மொழிந்தார்.

➤ ஆரிய மாயை (1943 - இல் வெளியானது) என்ற நூலை எழுதியதற்காக அண்ணாவிற்கு, 1950 – இல் திருச்சி நீதிமன்றம் ஆறு மாதங்கள் சிறை தண்டனை விதித்தது. காங்கிரஸ் அரசினால் தடைசெய்யப்பட்ட அண்ணாவின் நூல்கள் - **ஆரிய மாயை, இலட்சிய வரலாறு**.

➤ 1951 -இல் சென்னையில் **என்.வி. நடராஜன்** தலைமையில் நடைபெற்ற தி.மு.க. வின் **முதலாவது மாநில மாநாட்டில்**, அடுத்த ஆண்டு (1952) நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது; மாநாட்டில் இறுதியில் பேசிய அண்ணா **"கண்ணீர்த் துளிகளே! என் கண்ணின் மணிகளே"** என்ற உணர்ச்சிமிக்க உரையொன்றை ஆற்றினார்.

➤ 1953 இல் இவர் புகழ்பெற்ற **"மும்முனைப் போராட்டம்"** என்பதை அறிவிக்கிறார்.

- குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம் (தலைமை: ஈ.வெ.கி. சம்பத்)
- ரயில் நிறுத்தல் போராட்டம்
- கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம் (தலைமை: மு. கருணாநிதி)

➤ 1953 – இல் தமது கட்சிக்காக (திமுக) இவர் **நம்நாடு** என்னும் இதழை வெளியிட்டார்.

➤ 1956 மே மாதம் திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. வின் இரண்டாவது மாநில மாநாட்டில், அடுத்த ஆண்டு **(1957)** நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவது என்று தி.மு.க. முடிவு செய்தது.

➤ அதன்படி, 1957 தேர்தலில் தி.மு.க. போட்டியிட்டு, **15 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும், இரண்டு மக்களவைத் தொகுதிகளிலும்** வெற்றி பெற்றது. அண்ணா காஞ்சிபுரம் தொகுதியில் வெற்றி பெற்று சட்டமன்றம் சென்றார்.

➤ 1957 - ஆம் ஆண்டு இவர் தனது கருத்துகள் உலகமெங்கும் பரவ வேண்டும் என்பதற்காக **Home Land** என்ற **ஆங்கில வார இதழைத்** தொடங்கினார். அண்ணா வெளியிட்ட மற்றொரு ஆங்கில இதழ் **Home Rule** (1966).



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsalexammaterials

- 1962 பிப்ரவரியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி.மு.க. போட்டியிட்டு, **50 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும், ஏழு மக்களவைத் தொகுதிகளிலும்** வெற்றி பெற்றது. கட்சிக்குப் பெரிய வெற்றி கிடைத்தாலும் அண்ணா சட்டமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தார். அதன்பின் மார்ச்சு 20 ஆம் நாள், அண்ணா **மாநிலங்களவைக்குத்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1962 இல் ஏற்பட்ட சீனப் போரின் காரணமாகப் பிரிவினைவாதம் அல்லது தனிநாடு கேட்பது ஆகியவை 1963-இல் அரசியலமைப்பு ரீதியாகத் **(16வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம்)** தடை செய்யப்பட்டது. இதன் காரணமாக திராவிட நாடு கொள்கையைக் கைவிடுவது என்ற முடிவினை அண்ணா மேற்கொண்டார்.
- இதன் தொடர்ச்சியாக 1963 இல் திராவிட நாடு இதழ் நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக **'காஞ்சி'** என்னும் இதழை தனது கருத்துக் களமாக அமைத்துக் கொண்டார்.
- அதன்பின் 1963 இல் இந்தியை ஆட்சி மொழியாக்கும் அரசியல் சட்ட திருத்தத்தை எதிர்த்து தி.மு.க. ஆனது அரசியலமைப்பின் **பகுதி XVII** யை தீ இட்டு எரிக்கும் போராட்டத்தை அறிவித்தது. (பகுதி XVII ஆனது அலுவல் மொழிப் பற்றியது). இந்த பகுதியானது இந்தியை தமிழர்களின் மீது கட்டாயப்படுத்தி திணிக்கிறது என்று கருதினார் அண்ணா.
- இந்த போராட்டமானது 1963 நவம்பர் 17 ஆம் தேதி துவக்கப்படும் முன் தி.மு.க. தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். தி.மு.க. தலைவர் அண்ணா கைது செய்யப்பட்டு அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அவருக்கு 6 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த சட்ட எரிப்புப் போராட்டம் தி.மு.க வின் செல்வாக்கை மேலும் அதிகரித்தது.
- 1965 இல் இந்தியானது ஆட்சி மொழியாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதனால் மாநிலத்தை ஆண்ட காங்கிரஸின் செல்வாக்கு சரியத் தொடங்கியது. அண்ணா தலைமையிலான தி.மு.க. விற்கு செல்வாக்கு உயரத் தொடங்கியது.

### ஆட்சி அமைத்தல்:

- 1967 பிப்ரவரியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், இராஜாஜியின் சுதந்திராக் கட்சி, மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி, முஸ்லிம் லீக், ம.பொ. சிவஞானத்தின் "தமிழரசுக் கழகம்", ஆதித்தனாரின் "நாம் தமிழர்" முதலிய கட்சிகளுடன் தி.மு.க. கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது. இக்கூட்டணி **ஐக்கிய முன்னணி (United Front)** என்று அழைக்கப்பட்டது.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsaramaterials

- சென்னை மாநிலச் சட்டப் பேரவையில் **138** இடங்களையும், மக்களவைக்குத் தி.மு.க. போட்டியிட்ட **25** இடங்களையும் கைப்பற்றி தி.மு.க. மாபெரும் வெற்றியைப் பெற்றது. 1967 தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றதற்கான முக்கியமான காரணங்கள் **இந்தி எதிர்ப்பு போராட்டம்** மற்றும் பக்தவத்சலத்தின் காலத்தில் நிலவிய **அரிசிப் பற்றாக்குறை** ஆகியவை ஆகும்.
- தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் அண்ணாவை சட்டசபை தி.மு.க தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.
- பின்னர், சென்னையிலிருந்து திருச்சி சென்ற அண்ணா, பெரியாரைச் சந்தித்து அவருடைய வாழ்த்துகளைப் பெற்றார். அது முதல் பெரியார் "தி.மு.க. ஆட்சியை - ஒரு பகுத்தறிவு ஆட்சி" என்று கூறி, தன்னுடைய உயிர் உள்ளவரை அதற்கு ஆதரவாக இருந்தார்.
- **1967 மார்ச்சு 6** ஆம் நாள் அண்ணா தலைமையில், தி.மு.க. ஆட்சி அமைத்தது. இவர் முதலமைச்சர் ஆனார். இவர் அந்த தேர்தலின் பொழுது சட்டமன்றத்திற்கு போட்டியிடவில்லை ஆதலால் 1967, ஏப்ரல் 22- ஆம் நாள் சென்னை மாநகராட்சி தொகுதிக்கெனத் தமிழ்நாடு சட்ட மேலவையில் காலியாக இருந்த ஒரு இடத்திற்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் அண்ணா போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- அண்ணாவின் அமைச்சரவையில் இரா. நெடுஞ்செழியன் (கல்வி), மு. கருணாநிதி (பொதுப்பணி), கே.ஏ. மதியழகன் (உணவு), ஏ.கோவிந்தசாமி (விவசாயம்), சத்தியவாணிமுத்து (ஆதி திராவிடர் நலம்), எஸ். மாதவன் (சட்டம்), எஸ்.ஜே. சாதிக் பாட்சா (மக்கள் நல்வாழ்வுத் துறை), எம். முத்துச்சாமி (உள்ளாட்சி) ஆகியோர் இடம் பெற்றனர்.

### சாதனைகள்:

- இவரது ஆட்சி சமயச் சார்பற்றது. மதம் அரசியலோடு கலக்கக்கூடாது என்பதே மதச்சார்பற்ற ஆட்சியின் அடையாளம். அதனால் தான் அண்ணா அரசாங்க அலுவலகங்களில் கடவுள் படங்களை வைக்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்தார். இவர் **"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"** என்ற கொள்கையை முன்மொழிந்தவர் ஆவார்.
- தேர்தல் பிரச்சாரத்தின் போது ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி கொடுப்பதே தனது குறிக்கோள் என்று வாக்குறுதி கொடுத்தார். அந்த லட்சியத்தை நிறைவேற்றும் பொருட்டு 1967 மே 15 ஆம் தேதி துவக்க நடவடிக்கையாக **கோவையிலும்**, **சென்னையிலும்** "படி அரிசி" அதாவது **ரூபாய்க்கு ஒரு படி அரிசி** என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

- **1925** -லிருந்து பெரியார் நடத்திவந்த சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாகக் கூடிய சட்டம் ஒன்றை, **1967**-இல் முதலமைச்சர் அண்ணா கொண்டு வந்தார்.
  - அந்தக் காலத்தில் பிராமணர்களின் தலைமையில்தான் திருமணங்கள் நடைபெறும். அவர்கள் சமஸ்கிருத மந்திரங்களை ஓதித் திருமணங்களை நடத்துவார்கள். இதனை கடுமையாக எதிர்த்த பெரியார் இதற்கு மாற்றாக சுய மரியாதைத் திருமணங்களை நடத்தி வந்தார். இதன்படி தாலி அணியாமல் வேத மந்திரங்கள் ஓதாமல் ஒருவருக்கு ஒருவர் மாலை மாற்றிக் கொள்ளும் வழிமுறையை பெரியார் அறிமுகப்படுத்தினார்.
  - இதற்காக **"இந்து திருமணங்கள் திருத்த மசோதா"** (Hindu Marriages Amendment Bill) வை சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தினார் அண்ணா. மேற்கண்ட சட்ட மசோதா சட்டமாக நிறைவேறிய பின்னர் சுயமரியாதைத் திருமணங்களுக்கு **சட்ட அங்கீகாரம்** கிடைத்தது.
- சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்கட்குத் தங்கப் பதக்கம் வழங்கும் திட்டம் அறிமுகமானது.
- விதவைகளை மறுமணம் செய்பவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட்டது.
- 1967 ஜூலை மாதம் அண்ணாவினால் புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள செக்ரடேரியேட் ஆனது **தலைமைச் செயலகம்** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- அண்ணா அவர்கள் சென்னை மாகாணத்தின் பெயரை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தினார். (இப்பெயர் மாற்றத்திற்காக 1957 இல் **சங்கரலிங்கனார்** உயிர்த்தியாகம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது). அத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. நாடாளுமன்றமானது **சரத்து 3** (Article 3) யை திருத்தம் செய்து அதற்கு ஒப்புதல் அளித்தது. அதன்பின் **1969 ஜனவரி 14** ஆம் தேதி சென்னை மாகாணத்தின் பெயர் சட்டப்படியாக தமிழ்நாடு என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- தமிழக அரசின் இலச்சினையான கோபுரச் சின்னத்தில் இருந்த கவர்ன்மென்ட் ஆப் மெட்ராஸ், சத்யமேவ ஜயதே போன்ற பிற மொழிச் சொற்களை நீக்கி **"தமிழக அரசு" "வாய்மையே வெல்லும்"** என்கிற தமிழ்ச் சொற்களை அண்ணா பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.
- சீரணி என்ற 1300 தொண்டர்களைக் கொண்ட அமைப்பு உருவாக்கப்பட்டது.
- ஆட்சித் துறையில் தமிழ் அறிமுகம் செய்யப்பட்டது. கூவம் நதியைத் சீரமைக்க ஒரு திட்டம் அறிமுகம் ஆனது.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterials

- புன்செய் நிலங்களின் மீதான நிலவரியை ரத்து செய்தார்.
- இவர் நடைமுறையில் இருந்த இலவச துவக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை அடுத்த நிலைக்குக் கொண்டு சென்றார். அதன்படி மாத வருவாய் ரூ.1500 க்குக் குறைவாக உள்ள பெற்றோரின் பிள்ளைகள் இலவச 'பட்டப்படிப்பிற்கு முந்தைய படிப்பு' (Pre – University Course (or) PUC) பெற வழி வகுக்கப்பட்டது.
- அண்ணா அவரது பொருளாதாரக் கொள்கைக்கு விஞ்ஞான சோஷலிசம் (Scientific Socialism) என்று பெயரிட்டார். "சோஷலிசம் என்பது சேமநலம் மட்டுமல்ல; சேமத்துக்கு உறுதி தருவது மட்டுமல்ல, சமத்துவத்தை உண்டாக்கப் பாடுபடுவது சோஷலிசம்" என்று வரையறுத்தார். இக்கொள்கையின் முதல் கட்ட நடவடிக்கையாக பேருந்துப் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்பட்டது. அப்போதெல்லாம் தமிழகத்தில் தனியார் பேருந்துகளின் ஆதிக்கம்தான் இருந்தது. இந்த நிலையை மாற்றி, **நாட்டிலேயே முதன்முறையாகத்** தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.
- சென்னையில் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான **வீராணம் குடிநீர் திட்டத்தை** உருவாக்கினார். கடலூர் மாவட்டத்தில் இத்திட்டத்துக்கான அடிக்கல்லை நாட்டினார். இது பின்னாளில் செயல்படுத்தப்பட்டது.
- முதலமைச்சர் நலநிதி (Chief Minister's Welfare Fund) துவக்கப்பட்டது.
- 1968 இல் **இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை** இவர் சிறப்பாக நடத்தினார்.
- 1963 ஆட்சி மொழிகள் சட்டம் (Official Languages Act, 1963) திருத்தங்கள் செய்யப்பட்டு 1968 ஜனவரி 8 ஆம் தேதி திருத்தச் சட்டமாக நடைமுறைக்கு வந்தது. தமிழ்நாட்டு மாணவர்கள் இத்தீர்மானத்துக்கு எதிராக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். அண்ணா அளித்த உறுதிமொழியின் பேரில் போராட்டம் கைவிடப்பட்டது. அந்த உறுதிமொழியின் விளைவே **இருமொழிக்கொள்கை.** (அதாவது தமிழ் மற்றும் ஆங்கிலம் மட்டுமே).

## சிறப்புகள்:

- சென்னை சிந்தனையாளர் மன்றத்தில் நடைபெற்ற விழாவில் **பாவேந்தர் பாரதிதாசன்** அண்ணாவிற்கு "அறிஞர்" என்னும் பட்டத்தைச் சூட்டினார். அது முதற்கொண்டு அவர், "அறிஞர் அண்ணா" என்றே தமிழக மக்களால் அழைக்கப் பெற்றார். மேலும் பேரறிஞர் அண்ணா என்றும் அழைக்கப்படுகிறார்.
- தம்முடைய நேர்மைத் திறத்தாலும் கொள்கை உரத்தாலும் **"தென்னாட்டுக் காந்தி"** என்ற பெரும் சிறப்பினையும் பெற்றார்.

- 1968 இல் அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக்கழகம் இவருக்கு **“சப்பெல்லோ சிப்”** எனப்படும் உயரிய அறிஞருக்குரிய பட்டத்தை அளித்துச் சிறப்பித்தது. இதனைப் பெற்ற அமெரிக்கர் அல்லாத முதல் நபர் அண்ணாவே ஆவார்.
- அண்ணாவின் தலைமைப்பண்பு, நிர்வாக நேர்மை, அரசியல் பண்பாடு ஆகியவற்றை சிறப்பிக்கும் வகையில், **அண்ணாமலைப் பல்கலைக்கழகம்** 1968 ஆம் ஆண்டு **கௌரவ டாக்டர் பட்டம்** (Doctor of Literature) அளித்து அண்ணாவைப் பாராட்டியது.
- அண்ணாதுரையின் புதிய புரட்சிகரமான படைப்புகளைக் கூர்ந்து கவனித்து வந்த கல்கி கிருஷ்ணமூர்த்தி அவரை ஜெர்மனியின் நாடக மேதை **இப்சனோடு** (Ibsen) ஒப்பிட்டு எழுதினார். மேலும் அண்ணாவை இவர் **“தென்னாட்டு பெர்னாட்ஷா”** என்றும் அழைத்தார்.
- “அண்ணா உயர் பண்புகளின் உறைவிடம்”, என்று முன்னாள் குடியரசுத் தலைவர் **வி.வி.கிரி** பாராட்டினார்.
- “ஒரு கவிஞனின் படைப்புச் சக்தி: ஒரு சிறந்த மேதையின் காந்த சக்தி. ஓர் அரசியல்வாதியின் மதி நுட்பம் சாதாரண மக்களாலும் நேசிக்கப்பட்டும், நேசித்தும் வாழும் எளிமை; அடக்கம்; அன்பு அனைத்தும் ஒரே மனிதனில் இணைந்திருப்பது அபூர்வ மனிதர் அண்ணா” என்று **வெசுலி நியூபிகின்** என்ற அயல்நாட்டு அறிஞர் கூறினார்.
- அண்ணா மிகச் சிறந்த சொற்பொழிவாளர், இவரின் மேடைப் பேச்சு தனித்துவமானது.

## இறுதிகாலம்:

- 1968 செப்டம்பர் மாதம் அண்ணாவுக்குப் புற்றுநோய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மருத்துவ சிகிச்சைக்காக அவர் அமெரிக்கா அனுப்பப்பட்டு அங்குள்ள நியூயார்க் நினைவு மருத்துவமனையில் (New York Memorial Hospital) அனுமதிக்கப்பட்டார். **டாக்டர். தியோடர் மில்லர்** (Dr. Theodore Miller) சிகிச்சை அளித்தார். அறுவை சிகிச்சை முடிந்து சென்னைக்கு திரும்பினார்.
- இவர் 1969 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதி (பொங்கல் தினம்) நடைப்பெற்ற **“கலைவானர்”** **என்.எஸ். கிருஷ்ணன் சிலை திறப்பு** விழாவில் கலந்து கொண்டார். இதுதான் இவரின் **கடைசி பொது நிகழ்ச்சி** ஆகும்.
- அண்ணா **1969 பிப்ரவரி 3-** ஆம் தேதி காலமானார்.
- இவரது இறுதி ஊர்வலத்தில் சுமார் **15 மில்லியன் மக்கள்** கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினர். இவருடைய உடல் சென்னையிலுள்ள **மெரினா கடற்கரையில்** அடக்கம்


SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterias

செய்யப்பட்டது. அதன் பிறகு இவரின் நினைவை போற்றும் வகையில் இவ்விடம் **அண்ணா சதுக்கம்** என்ற பெயரில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilnaduexammaterials

SHANKAR IAS ACADEMY™

THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)



## காமராசர்


SHANKAR IAS ACADEMY

AP-2241, 2nd Floor, 12th Main Road,
Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.
www.shankariasacademy.com
Email : tnpscfeedback@shankarias.in


https://t.me/tamilexammaterials

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 2. காமராசர்

### இளம் பருவம்:

- காமராசர் அவர்கள் 1903 ஜூலை 15 ஆம் தேதி **விருதுப்பட்டியில்** (விருதுநகர்) பிறந்தார்.
- இவரின் பெற்றோர்: குமாரசாமி - சிவகாமி அம்மையார்.
- இவரின் இயற்பெயர் **காமாட்சி** (குலச்சாமியின் நினைவாக இப்பெயர் வைக்கப்பட்டது).
- இவரை "ராஜா" என்று பெற்றோர் அழைத்தனர். பின்னர் "காமாட்சி ராஜா" என்று அழைக்கப்பட்டார். இப்பெயரே பின்னர் சுருக்கமாக "காமராஜ்" என்று ஆனது. பிற்காலத்தில் "காமராசர்" என அழைக்கப்பட்டார்.
- இவர் பயின்ற பள்ளிகள்: **ஏனாதி நாயனார் வித்யாசாலா** மற்றும் **சத்திரிய வித்யாசாலா**.
- குடும்பத்தின் பொருளாதார சூழல் காரணமாக இவர் 6 ஆம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

### விடுதலைப் போராட்டம்:

- இவர் 1919 இல் காங்கிரசில் உறுப்பினராக இணைந்தார்.
- இவர் 1920 இல் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்.
- இவர் 1922 இல் விருதுநகர் நகராட்சி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் காங்கிரஸ் தலைவர் **எஸ். சத்தியமூர்த்தியை** சந்தித்தார். அவரை தனது **அரசியல் குருவாகக்** கருதினார்.
- இவர் வைக்கம் சத்யாகிரகம் (1924) மற்றும் சுசீந்திரம் ஆலய நுழைவுப் போராட்டம் போன்றவற்றில் கலந்து கொண்டார்.
- இவர் 1925 இல் சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஆனார்.
- 1927 இல் நடைபெற்ற **வாள் சத்யாகிரகத்தில்** (Sword Satyagraha) இவர் கலந்து கொண்டார்.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsanexammaterials

- 1927 இல் காமராசர் அவர்களால் **நேருவின்** தலைமையில் **இந்தியக் குடியரசுக் காங்கிரஸ்** என்னும் மாநாடு விருதுநகரில் நடத்தப்பட்டது.
- காங்கிரஸ் இயக்கத்தை தமிழகத்தின் கிராமப்புறங்களில் வளர்ப்பதற்கு காமராசர் கிராமங்களில் பரப்புரை செய்தார். இதற்கு காமராசருடன் இணைந்து செயல்பட்டவர்கள் 'திருவண்ணாமலை' **அண்ணாமலைப் பிள்ளை** மற்றும் 'இராஜபாளையம்' **P.S. குமாரசாமி ராஜா** (இவர் பிற்காலத்தில் முதலமைச்சர் ஆனார்).
- 1928 இல் சைமன் குழு மதுரைக்கு வந்த பொழுது அதனை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் **ஜார்ஜ் ஜோசப்புடன்** இணைந்து காமராசர் பங்கேற்றார்.
- 1930 இல் வேதாரண்யம் உப்பு சத்யாகிரகத்தில் காமராசர் கலந்து கொண்டதால் அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு **அலிப்பூர் சிறையில்** அடைக்கப்பட்டார். இதுவே காமராசரின் **முதல் சிறைவாசம்** ஆகும். பின்னர் **காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின்** (1931, மார்ச் 5) படி சத்யாகிரகிகள் விடுவிக்கப்பட்டனர்.
- 1936 இல் காரைக்குடியில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில் எஸ். சத்தியமூர்த்தி தலைவராகவும், காமராசர் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இவர் 1937 இல் சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் **சாத்தூர்** தொகுதியில் இருந்து போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## மாநிலத் தலைவர்:

- காமராசர் **1940** இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் 1940 இல் தனிநபர் சத்யாகிரகப் போராட்டம் தொடர்பாக காந்தியை சந்திக்க வார்தாவுக்கு செல்லும் வழியில் கரூரில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.
- இவர் சிறையில் இருக்கும்போதே 1941 இல் விருதுநகர் நகராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். (பின்னர் அதனை ராஜினாமா செய்கிறார்).
- 1942 ஆம் ஆண்டு பம்பாயில் **"வெள்ளையனே வெளியேறு"** தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்ட காமராசர் பின்னர் தமிழகம் திரும்பும்


SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterials

போது கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். (முதலில் **அமராவதி சிறை** பின்னர் **வேலூர் சிறை** - சிறை தண்டனை **3 ஆண்டுகள்).**

- 1946 இல் சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் **சாத்தூர்** தொகுதியிலிருந்து காமராசர் வெற்றி பெற்றார்.
- இவர் 1946 இல் ஏற்படுத்தப்பட்ட **அரசியலமைப்பு நிர்ணய சபையின்** (Constituent Assembly) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்தியா விடுதலை பெற்றதும் இவர் எஸ். சத்தியமூர்த்தியின் வீட்டிற்கு சென்று **தேசியக் கொடியை** ஏற்றினார்.
- இவர் 1947 இல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## முதல் திருத்தத்தின் மூலவர்:

- 1928 ஆம் ஆண்டு முதல் சென்னை மாகாணத்தில் கல்வி, வேலைவாய்ப்பில் பின்பற்றப்பட்டு வந்த ‘வகுப்பு வாரி இடஒதுக்கீட்டு அரசாணை’ **(Communal G.O)** ஆனது “இந்திய அரசியலமைப்பிற்கு எதிரானது” என்று **செண்பகம் துரைராஜன் வழக்கில்** 1950 இல் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பின்னர் உச்சநீதிமன்றமும் மேற்கண்ட தீர்ப்பை உறுதி செய்தது.
  - இதனால் பிற்படுத்தப்பட்டோரின் உரிமைகள் பறிக்கப்படுவதாக தமிழக மக்கள் எண்ணினர். தமிழகத்தில் ஒரு பதட்டமான சூழல் உருவாகியது.
  - அப்பொழுது காமராசர் அவர்கள் **தமிழக காங்கிரஸ் தலைவர்** என்ற முறையில் பிரதமர் நேருவிடம் தமிழகத்தின் சூழ்நிலையை விளக்கி வகுப்புவாரி உரிமை தொடர அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். காமராசரின் ஆலோசனையை ஏற்றுக் கொண்ட நேரு அவர்கள் **முதலாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தை** (1951) கொண்டு வந்தார்.
- 1952 இல் சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சிக்கு 375 இடங்களில் 152 இல் மட்டுமே வெற்றி கிடைத்தது. இதனைத் தொடர்ந்து ராஜாஜி சில கட்சிகளின் ஆதரவுடன் மாநில முதலமைச்சர் ஆனார். இத்தேர்தலில் காமராசர் ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் இருந்து மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsanexammaterials

- 1953 இல் முதலமைச்சர் இராஜாஜி **'மாறுபட்ட தொடக்கக் கல்வித் திட்டம்'** (The Modified Scheme of Elementary Education) என்னும் ஒரு புதிய கல்வி முறையை தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார். இது பெரும் சர்ச்சையை கிளப்பியது. மேலும் இது **குலக்கல்வித் திட்டம்** என பலரால் எதிர்க்கப்பட்டது. காங்கிரஸ் கட்சிக்குள்ளும் மிகப்பெரிய எதிர்ப்பு கிளம்பியது. இதனால் ராஜாஜி, தனது முதலமைச்சர் பதவியிலிருந்து **1954, மார்ச் 25** இல் விலகினார்.

## முதலமைச்சர்:

- காமராசர் **1954 ஏப்ரல் 13** இல் தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். **(முதல்முறை)** அப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காரணத்தினால் அதனை ராஜினாமா செய்தார்.
- காமராசர் முதலமைச்சர் ஆனதும் இதற்கு முன் ராஜாஜியின் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களை மாற்றாமல் அப்படியே வைத்துக் கொண்டார்.
- காமராசரின் அமைச்சரவை (1954)
  - ஏ.பி. ஷெட்டி (சுகாதாரம்)
  - எம். பக்தவத்சலம் (வேளாண்மை)
  - சி.சுப்ரமணியம் (கல்வி)
  - எம்.ஏ. மாணிக்கவேலு (வருவாய்த்துறை)
  - சண்முக ராஜேஸ்வரி சேதுபதி (பொதுப்பணித் துறை)
  - பரமேஸ்வரன் (இந்து அறநிலையத்துறை)
  - எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார் (உள்ளாட்சி)
- காமராசர் இந்தியாவில் ஆங்கிலக் கல்வி பெறாத முதலாவது முதலமைச்சர் என அப்பொழுது கருதப்பட்டவர் ஆவார்.
- இராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்தை 1954 மே 18-இல் கைவிடுவதாக முதலமைச்சர் காமராசர் அறிவித்தார்.
- பின்னர் குடியாத்தம் இடைத்தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterias

- 1955 இல் சென்னைக்கு அருகே உள்ள ஆவடியில் இந்திய தேசிய காங்கிரசின் கூட்டத்தொடர் (Session) நடைபெற்றது. இதை நடத்தும் பொறுப்பு காமராசருக்கு அளிக்கப்பட்டது.
    - கூட்டத் தொடர் நடைபெறும் வளாகம் **'சத்தியமூர்த்தி நகர்'** என்று பெயரிடப்பட்டது.
    - கூட்டத்தொடரின் தலைவர் - **U.N. தேபர்**.
    - கூட்டத் தொடருக்கு சிறப்பு அழைப்பாளர் - யூகோஸ்லாவியா அதிபர் **மார்ஷல் டிட்டோ**.
    - **சோஷலிச பாணியிலான சமுதாயம்** (Socialistic Pattern of Society) **அமைப்போம்** என்னும் புகழ்பெற்ற தீர்மானம் நிறைவேறியது.
    - இதனை முன்மொழிந்தவர் - **நேரு**.
    - இதனை வழி மொழிந்தவர் - **காமராசர்**.
- **B.C.ராய்** அவர்களின் திட்டப்படி 1956 -இல் மத்திய அரசு உருவாக்க முனைந்த **"தட்சிணப் பிரதேசம்"** என்னும் முறையை காமராசர் கடுமையாக எதிர்த்தார்.
    - தட்சிணப் பிரதேசம் என்பது தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றை ஒரே நிர்வாகப் பகுதியாக அமைப்பது ஆகும்.
- காமராசர் ஆட்சிக் காலத்தின் பொழுது தான் இன்றைய தமிழ்நாடு முழுவடிவம் (நிலப்பரப்பு ரீதியாக) அடைந்தது.

## கல்விப்புரட்சி:

- பள்ளிக் கல்வியை பாதியிலேயே நிறுத்திய காமராசர் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த அனைத்து குழந்தைகளும் கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.
- இதற்காக இவர் துவக்கக் கல்விக்காக செலவிடும் தொகையை இரு மடங்காக உயர்த்தினார்.

- மாணவர்கள் வறுமையின் காரணமாக படிப்பைப் பாதியிலேயே விட்டு விடுவதை தடுக்க அனைத்து பள்ளிகளிலும் மக்கள் பங்கேற்புடன் மதிய உணவுத் திட்டத்தை காமராசர் அறிமுகப்படுத்தினார்.
- காமராசருக்கு முன்பு **1921** இல் நீதிக்கட்சித் தலைவர் **தியாகராய செட்டி** அவர்கள் சென்னை மேயராக இருந்த பொழுது சென்னையில் உள்ள சில மாநகராட்சிப் பள்ளிகளில் மட்டும் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருந்தார்.
- காமராசரின் ஆலோசனையின் பேரில் பொதுக்கல்வி இயக்குநர் **நெ.து.சுந்தர வடிவேலு** அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை மக்கள் பங்கேற்புடன் கல்வி இயக்கமாக மாற்றினார்.
- காமராசரின் முதல் மதிய உணவுத் திட்டமானது 1956 - ஆம் ஆண்டு **பாரதியார் பிறந்த எட்டயபுரத்தில் முதன்முதலாக** செயல்படுத்தப்பட்டது.
- பின்னர் இத்திட்டமானது தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது.
- மதிய உணவுத் திட்டமானது **இரண்டு இலக்குகளை** குறிக்கோளாகக் கொண்டிருந்தது.
  - பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரித்தல்.
  - பள்ளிகளில் மாணவர் இடைநிற்றலை குறைத்தல்.
- 1957 இல் பள்ளிகள் பற்றிய கணக்கெடுப்புக்கு காமராசர் ஏற்பாடு செய்தார்.
- 1958 இல் காமராசர் **சென்னை மாநிலக் கல்வி அறிவுரைக் குழுவை** கல்வி அமைச்சர் **சி. சுப்ரமணியம்** தலைமையில் அமைத்தார்.
- மதிய உணவுத் திட்டத்திற்கான நிதி உதவியை பெற தமிழகம் முழுவதும் **பள்ளி மேம்பாட்டு மாநாட்டினை** நடத்திட காமராசர் ஆணை இட்டார்.
- 1958 இல் முதலாவது பள்ளி மேம்பாட்டு மாநாடு **கடம்பத்தூரில்** (திருவள்ளூர் மாவட்டம்) தொடங்கப்பட்டது.
- 1959 இல் ஆ. தெக்கூர் (காரைக்குடி) மற்றும் அடைக்கலப்பு (திருநெல்வேலி) ஆகிய இடங்களில் நடைபெற்ற பள்ளி மேம்பாட்டு மாநாட்டில் **பிரதமர் நேரு** கலந்து கொண்டார்.
- பள்ளி அலுவல் நாட்களை 180 லிருந்து 200 ஆக காமராசர் உயர்த்தினார்.
- ஆசிரியர் நலனைக் காக்க **ஆசிரியர் ஓய்வூதியத் திட்டத்தை** கொண்டு வந்தார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterials

- மாணவர்களிடம் ஏற்றத்தாழ்வற்ற நிலையை உருவாக்கும் பொருட்டு பள்ளிகளில் சீருடைத் திட்டத்தை காமராசர் அறிமுகப்படுத்தினார். பின்னர் ஏழை மாணவர்களுக்கு இலவச சீருடையையும் வழங்கினார்.
- 1960 இல் கட்டாயக் கல்வியை அறிமுகப்படுத்திய காமராசர், 1962- இல் அதை மாநிலம் முழுவதும் கொண்டு வந்தார்.
- காமராசரின் மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி கேள்விப்பட்ட **CARE** என்னும் **அமெரிக்க நிறுவனம்** ஆனது 1961 - 1962 கல்வி ஆண்டில் தமிழகப் பள்ளி மாணவர்களுக்கு பால்பவுடர் மற்றும் சில உணவுப் பொருட்களை கிடைக்கச் செய்தது.
- ஆங்கிலேயரின் ஆட்சியில் தமிழகத்தின் **7%** ஆக இருந்த கல்வி கற்போரின் எண்ணிக்கை காமராசரின் ஆட்சியில் **37%** ஆக உயர்ந்தது.
- 1957 இல் நடைப்பெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் 151 இடங்களை கைப்பற்றியது. காமராசர் இரண்டாவது முறையாக முதல் அமைச்சர் ஆனார். அவரின் அமைச்சரவை:
  - பக்தவத்சலம் (உள்துறை).
  - சி. சுப்ரமணியம் (நிதி)
  - ஆர். வெங்கட்ராமன் (தொழிற்சாலைகள்)
  - எம்.ஏ. மாணிக்க வேலு (வருவாய்)
  - பி. கக்கன் (பொதுப்பணி)
  - வி. ராமய்யா (மின்சாரம்)
  - லூர்தம்மாள் சைமன் (உள்ளாட்சி).

### பச்சைத் தமிழன்:

- 1956, டிசம்பர் 27-இல் **தமிழக அரசின் ஆட்சி மொழியாக** தமிழ் அறிவிக்கப்பட்டது. (அரசிதழில் 1957 ஜனவரி 23இல் வெளியிடப்பட்டது).
- 1957 - 58 ஆண்டிற்கான பட்ஜெட் (ஆண்டு நிதிநிலை அறிக்கை) ஆனது **முதல் முறையாக** தமிழில் தயாரித்து அளிக்கப்பட்டது.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsaexammaterias

- 1959 இல் தமிழறிஞர்களை உறுப்பினர்களாக கொண்ட **தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்** அமைக்கப்பட்டது. இதன் பரிந்துரைப்படி 1960 – 61 இல் கோவை அரசினர் கலைக்கல்லூரியில் B.A வகுப்பில் **தமிழ் பயிற்று மொழியாக** அறிமுகமானது.
- 1960 ஆம் ஆண்டு இந்திய மொழிகளிலேயே முதன்முதலாக காமராசர் ஆட்சியில்தான் தமிழ்மொழியில் **கலைக்களஞ்சியம் (கலைச்சொல் அகராதி)** உருவாக்கப்பட்டது.
- தமிழில் பாடநூல்களை வெளியிட **தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம்** துவங்கப்பட்டது.
- பெரியார் காமராசரை முதன்முதலாக **"பச்சைத் தமிழன்"** என அழைத்தார்.

## முற்போக்குச் சட்டங்கள்:

- இந்தியாவிலேயே முதல்முறையாகப் **பொது நூலகச் சட்டம்** ஒன்றை காமராசர் கொண்டு வந்து அதிகமான நூலகங்களை திறந்தார்.
- இவரின் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட **சென்னை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், 1955** ஆனது பண்ணையாட்களின் நலனை உறுதி செய்தது.
- 1958 இல் இவர் **சென்னை மாநில ஊராட்சி சட்டத்தை** கொண்டு வந்தார். இதன்மூலம் அதிக அளவில் 12,000 ஊராட்சிகளும் 375 ஊராட்சி ஒன்றியங்களும் உருவாக்கப்பட்டன.
- காமராசரின் ஆட்சியில் 1961 – இல் **சென்னை மாநில நிலச் சீர்திருத்தங்கள்** (நில உச்ச வரம்பு வரையறுத்தல்) **சட்டம்** கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் ஆனது 5 பேர் உள்ள குடும்பத்திற்கு **30 ஏக்கருக்கு மேல்** நிலம் வைத்திருப்பதை ஒழுங்குப்படுத்தியது.

## வளர்ச்சித் திட்டங்கள்:

- 1957 இல் **மாநிலத் தொழில் வளர்ச்சிக் குழுமம்** ஒன்றை அமைத்தார். இக்குழுவினால் அதிகளவில் தொழிற்பேட்டைகள் தமிழக அளவில் தொடங்கப்பட்டன.
- மேட்டூர் காகிதத் தொழிற்சாலை, மேட்டூர் கால்வாய்த் திட்டம், காவேரி டெல்டா அபிவிருத்தி திட்டம் போன்றவை இவரால் கொண்டு வரப்பட்டது.
- 1958 இல் மணி முத்தாறு அணை கட்டப்பட்டது. மேலும் அமராவதி அணையும் உருவானது.



SHANKAR IAS ACADEMY https://t.me/tamilexammaterials

- பரம்பிக் குளம் - ஆழியாறு நீர்ப்பாசனத் திட்டம் ஆனது தமிழ்நாடு - கேரளா ஆகிய இரு மாநிலங்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட்டன. 1961 இல் **பிரதமர் நேரு** பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தை தொடக்கி வைத்தார்.
- இவரின் ஆட்சியில் **குந்தா மின்திட்டம்** நிறைவேற்றப்பட்டது இதற்கு அப்போதைய தொழிற்துறை அமைச்சர் **ஆர்.வெங்கட்ராமன்** (பின்னாளில் குடியரசுத் தலைவர் ஆனார்) மூல காரணமாக இருந்தார்.
- இவரின் ஆட்சியில் தமிழ்நாடு வேளாண்மை, தொழில், கல்வி, மருத்துவம் என அனைத்து துறையில் முன்னேற்றம் கண்டது.
- இவரின் ஆட்சியில் மின் உற்பத்தி அதிகமாக்கப்பட்டது. இதனால் அதிக அளவில் கிராமங்கள் மின் இணைப்பைப் பெற்றன. மேலும் புதியதாக அதிகளவு தொழிற்சாலையும் தொடங்கப்பட்டன.
- தமிழகத்தில் காமராசர் செயல்படுத்திய திட்டங்கள் சோஷியலிசத்தை (சமதர்மம்) உருவாக்கும் நோக்குடன் அமைந்திருந்தன. ஆதலால் இவர் **'ஜனநாயக சோஷலிசச் சிற்பி'** என மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார்.
- மத்திய அரசின் முக்கியமான திட்டங்களை தமிழகத்தில் கொண்டு வந்த பெருமை காமராசரையே சேரும்.
  - நெய்வேலி பழுப்பு நிலக்கரி (கிழக்கு ஜெர்மனி உதவியுடன் மத்திய அரசின் திட்டம்) (காமராசரின் தனிப்பட்ட முயற்சியால் கொண்டுவரப்பட்டது)
  - நெய்வேலி அனல் மின்திட்டம் (ரஷ்யா உதவி)
  - சென்னை ரயில் பெட்டித் தொழிற்சாலை (சுவிட்சர்லாந்து உதவி)
  - இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை (இத்தாலி உதவி)
  - ஊட்டி கச்சா பிலிம் தொழிற்சாலை (பிரான்ஸ் உதவி)
  - திருச்சி பெல் (BHEL) நிறுவனம்
  - மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்
  - சென்னை ஆவடி பீரங்கி வண்டித் தொழிற்சாலை.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterias

## தொடர்வெற்றி:

- காங்கிரசின் திட்டங்களை பரப்புரை செய்யும் நோக்கில் காமராசரின் வழிகாட்டுதலின் பேரில் 1960 இல் **நவசக்தி** என்னும் நாளிதழ் துவக்கப்பட்டது. (ஆசிரியர் - **டி.எஸ். சொக்கலிங்கம்**)
- 1962 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் 139 இடங்களில் வென்று காமராசர் தலைமையில் மீண்டும் ஆட்சி அமைத்தது. காமராசர் **மூன்றாவது முறையாக** தொடர்ந்து முதலமைச்சராகப் பதவி ஏற்றார்.
- காமராசரின் மூன்றாவது அமைச்சரவை (1962, மார்ச்சு 3)
    - எம்.பக்தவத்சலம் (நிதி, கல்வி)
    - ஜோதி வெங்கடாசலம் (பொது சுகாதாரம்)
    - ஆர்.வெங்கட்ராமன் (நிதி)
    - எஸ்.எம்.அப்துல் மஜீத் (உள்ளாட்சி)
    - பி.கக்கன் (விவசாயம்)
    - வி.ராமய்யா (பொதுப்பணி, வருவாய்)
    - என்.எஸ்.எஸ். மன்றாடியார் (கூட்டுறவு, காடுகள்)
    - ஜி.பூவராகன் (விளம்பரம், தகவல்).
- 1954 முதல் 1963 வரை காமராசர் ஒன்பது ஆண்டுகள் முதலமைச்சராகப் பணியாற்றினார்.

## கே - பிளான்:

- கே - பிளான் (காமராசர் திட்டம்) 1962- ஆம் ஆண்டின் சீனப் போருக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி பலவீனமாக உள்ளதை உணர்ந்த பிரதமர் நேரு காமராசரை **ஐதராபாத்தில்** சந்தித்தார். அப்பொழுது காங்கிரஸ் கட்சியை பலப்படுத்த காமராசர் வகுத்த திட்டம் 'காமராசர் திட்டம்' அல்லது 'K plan' (Kamaraj plan) என அழைக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsanexammaterials

- இத்திட்டத்தின் படி காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் அரசியலமைப்பு பதவியிலிருந்து விலகி கட்சிப்பணி ஆற்ற வேண்டும்.
- இத்திட்டத்தின் படி முதல்நபராக காமராசர் முதலமைச்சர் பதவியை **1963 அக்டோபர் 2** இல் துறந்தார்.
- காமராசரைத் தொடர்ந்து நேருவைத் தவிர்த்து மொரார்ஜி தேசாய் உட்பட பலர் அரசுப் பதவியிலிருந்து விலகி கட்சிப் பணிக்கு திரும்பினர்.

➢ **“காமராசர் பதவி விலகுவது தற்கொலைக்குச் சமமானது”** என்று பெரியார் குறிப்பிட்டார்.

## அகில இந்தியத் தலைவர்:

➢ காமராசர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக **1964 இல்** தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்வரும் காங்கிரஸ் கூட்டத் தொடருக்கு இவர் தலைமை வகித்தார்.

- புவனேஷ்வர் (1964)
- துர்காபூர் (1965)
- ஜெய்ப்பூர் (1966)

➢ 1964 மே 27- இல் பிரதமர் நேரு காலமானதும் **லால் பகதூர் சாஸ்திரி** பிரதமர் பதவியில் அமர காமராசர் பெரும் பங்கு வகித்தார்.

➢ 1966 இல் **தாஷ்கண்ட் ஒப்பந்தம்** கையெழுத்து ஆனவுடன் (ஜனவரி 10) பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி திடீரென காலமானார். இதைத்தொடர்ந்து பிரதமர் பதவியில் **இந்திராகாந்தி** அமர காமராசர் வழிவகைச் செய்தார்.

- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக காமராசர் பணியாற்றிய பொழுது டி. பிரகாசம், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா போன்றோர் முதலமைச்சராக வருவதற்கு காரணமாக இருந்தார்.
- அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவராக காமராசர் பணியாற்றிய பொழுது லால் பகதூர் சாஸ்திரி, இந்திராகாந்தி ஆகியோர் பிரதமராக உறுதுணையாக நின்றார்.



SHANKAR IAS ACADEMY
https://tnpscexammaterials

- முதலமைச்சர், பிரதமர் பதவிகளுக்கு தகுதியான நபர்களை தேர்ந்தெடுத்ததால் இவர் பெருமையுடன் **கிங்மேக்கர் (ஆட்சியாளர்களை உருவாக்குபவர்)** என அழைக்கப்படுகிறார்.

➢ 1965 ஜனவரி 25-இல் தமிழகத்தில் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆனது காங்கிரசின் செல்வாக்கை குறைத்தது. இதனால் காமராசர் 1967-இல் விருதுநகர் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

➢ காமராசர் 1967 ஆம் ஆண்டு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

## இறுதி காலம்:

➢ 1969 இல் காங்கிரசின் தலைவர்களிடம் கருத்து வேறுபாடு உருவாகி அகில இந்திய காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரிந்தது.

காங்கிரஸ்

- காங்கிரஸ் (அமைப்பு) அல்லது காங்கிரஸ் (O)
- சின்டிகேட் என அழைக்கப்பட்டது.
- **தலைவர்கள்:** நிசலிங்கப்பா<br>காமராசர்<br>நீலம் சஞ்சீவ ரெட்டி

- காங்கிரஸ் (ஆளும்) அல்லது காங்கிரஸ் (R)
- இன்டிகேட் என அழைக்கப்பட்டது
- **தலைவர்கள்:** இந்திராகாந்தி<br>பக்தவத்சலம்<br>சி.சுப்ரமணியம்

➢ 1969 இல் நாகர் கோவில் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் பெரும் வெற்றி பெற்றார்.

➢ 1971 சட்டமன்றத் தேர்தலில் காமராசர் தலைமையிலான காங்கிரஸ் (O) ஆனது ராஜாஜியின் சுதந்திராக் கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. ஆனால், காங்கிரஸ் (O) ஆனது 15 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது.

➢ காமராசர் 1975 அக்டோபர் 2-இல் இயற்கை எய்தினார்.

➢ அவரின் நல்லுடலானது அரசு மரியாதையுடன் சென்னை - கிண்டியில் அடக்கம் செய்யப்பட்டது.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsanexammaterias

- இவரின் மறைவுக்குப் பின்னர் 1976 இல் **பாரத ரத்னா விருது** அளிக்கப்பட்டது.

**காமராசர் ஏற்படுத்திய தாக்கம்:**

- 1995 இல் **மன்மோகன் சிங்** அவர்கள் நிதி அமைச்சராக இருந்த பொழுது காமராசர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தை அடிப்படையாக கொண்டு **'துவக்கக் கல்விக்கு உதவும் தேசிய ஊட்டச்சத்துத் திட்டம்'** (National Programme for Nutrition Support to primary Education) என்னும் திட்டத்தை இந்திய அளவில் கொண்டு வந்தார்.
- காமராசரின் "மதிய உணவுத் திட்டமானது" மேலும் மேம்படுத்தப்பட்டு **1982 ஜூலை 1** முதல் **சத்துணவுத் திட்டமாக** தமிழகத்தில் செயல்பட்டுவருகிறது.
- காமராசரின் பிறந்த நாளான ஜூலை 15 ஆனது **கல்வி வளர்ச்சித் தினம்** என 2008 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசினால் கொண்டாடப்பட்டு வருகிறது.
- இவர் **பெருந்தலைவர், கர்மவீரர், கல்விக்கண் திறந்தவர், கருப்புக் காந்தி (காலா காந்தி)** என அழைக்கப்படுகிறார்.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsaeramaterials

SHANKAR IAS ACADEMY ™
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)



## உத்தமர் ஓமந்தூர் ராமசாமி

SHANKAR IAS ACADEMY
AP-2241, 2nd Floor, 12th Main Road,
Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.
www.shankariasacademy.com
Email : tnpscfeedback@shankarias.in

https://t.me/tamilexammaterials

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 3. உத்தமர் ஓமந்தூர் ராமசாமி

### தொடக்கக் காலம்

- ஓமந்தூர் ராமசாமி அவர்கள் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே உள்ள ஓமந்தூரில் 1895 பிப்ரவரி 1 இல் பிறந்தார்.
- இவரின் பெற்றோர்: முத்துராமன் - ரங்கநாயகி அம்மையார்.
- இவரின் குடும்பத்திற்கு **பெரிய வளைவு** என்ற குடும்பப் பெயர் உண்டு. ஆதலால் இவர் Omandur Periyavalaivu Ramasamy **(OPR)** என அழைக்கப்பட்டார். பின்னாளில் இவர் **'உத்தமர் ஓ.பி.ஆர்'** மற்றும் **'ஓமந்தூரார்'** என மதிப்புடன் அழைக்கப்பட்டார்.
- தொடக்கக் கல்வியை ஓமந்தூரில் பயின்ற இவர் பின்னாளில் திண்டிவனம் ஆற்காடு மிஷனைச் சேர்ந்த **வால்டர் ஸ்கட்டர் உயர்நிலைப் பள்ளியிலும்**, சென்னை திருவல்லிக்கேணி **இந்து உயர் நிலைப் பள்ளியிலும்** பயின்றார்.
- இவர் குடும்ப சூழல் காரணமாக **8 ஆம் வகுப்பு** வரை மட்டுமே படித்தார்.
- 1910 இல் சிங்காரத்தம்மாள் உடன் திருமணம் நடைபெற்றது. சில ஆண்டுகளில் இவரின் மனைவியும் மகனும் உடல் நலக்குறைபாடு காரணமாக இறந்தனர்.
- இவர் திருவண்ணாமலையில் வாழ்ந்த **ரமண மகரிஷியின்** தீவிர பக்தர் ஆனார்.

### விடுதலைப் போராட்டம்

- **வெங்கம்பூர் சாஸ்திரி** என்பவர் ஓமந்தூரார் பொது வாழ்வில் ஈடுபட முக்கியக் காரணமாக இருந்தார்.
- இவர் 1919 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.
- இவர் 1920 இல் **நாக்பூரில் விஜயராகவாச்சாரியாரின்** தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தொடரில் கலந்து கொண்டார்.
- 1930 இல் ஓமந்தூரார் தென் ஆற்காடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் **தலைவர்** ஆனார்.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsexammaterias

- தென் ஆற்காடு மாவட்டம் என்பது தற்போதைய **கடலூர்**, **விழுப்புரம்**, **கள்ளக்குறிச்சி** ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது ஆகும்.

➢ இவர் 1930 இல் **வேதாரண்யம் உப்பு சத்யாகிரகத்திற்கு** தொண்டர்களை திரட்டி அங்கு அனுப்பினார். இதன் காரணமாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இது இவரின் **முதல் சிறைவாசம்** ஆகும்.

➢ 1932 இல் விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற **அன்னியத் துணி மறுப்பு போராட்டத்தில்** தீவிரமாக செயல்பட்ட ஓமந்தூராருக்கு **ஆறுமாத காலம்** சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

➢ 1936 இல் புகழ்பெற்ற **'கிராம்பு சத்யாகிரகம்'** என்னும் போராட்டத்தை புதுச்சேரியைச் சார்ந்த **எஸ்.ஆர். சுப்பிரமணியம்** மற்றும் **வி. சுப்பையா** ஆகியோருடன் இணைந்து ஓமந்தூரார் நடத்தினார்.

- ஆப்பிரிக்காவின் **ஜான்சி பார் தீவிலிருந்து** கிராம்பு மூட்டையுடன் இந்தியாவிற்கு வருகை புரிந்த கப்பலில் இருந்து கிராம்பு மூட்டையை துறைமுகங்களில் இறக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து **சர்தார் வல்லபாய் பட்டேல்** உட்பட தேசியத் தலைவர்களால் திட்டமிடப்பட்ட போராட்டமே கிராம்பு சத்யாகிரகம் ஆகும்.

➢ ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட இவர் **ஸ்கந்தா ஆசிரமம்** ஒன்றைத் தொடங்கினார்.

➢ 1938 இல் **எஸ். சத்திய மூர்த்தியை** எதிர்த்து போட்டியிட்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஆனார்.

➢ 1940 இல் **தனிநபர் சத்யாகிரகத்தில்** முதல் நபராக **வினோபா பாவே** ஈடுபட்டார். சென்னை மாகாண அளவில் **டி.எஸ்.எஸ். ராஜன்** இதில் பங்கேற்ற முதல் சத்யாகிரகி ஆவார்.

- இந்த சத்யாகிரகத்தில் ஈடுபட்ட ஓமந்தூரார் அவர்களுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. (முதலில் திருச்சி சிறை பின்னர் வேலூர் சிறை).

➢ வெள்ளையனே வெளியேறு போராட்டம் (1942) துவங்கும் சமயத்தில் ஓமந்தூரார் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சுமார் **15 மாதங்கள்** சிறையில் அடைக்கப்பட்டார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterias

- 1945 இல் விருதுநகர் மாவட்டம் **கோட்டையூரில்** நடைபெற்ற தேசிய விவசாயிகள் மாநாட்டிற்கு ஓமந்தூரார் தலைமை தாங்கினார்.
- 1946 இல் சென்னை மாகாண சட்ட மேலவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

## விவசாய முதல்வர்

- இவர் **1947 மார்ச் 23** -இல் சென்னை மாகாண முதலமைச்சர் ஆனார். இவருக்கு முன்பு முதலமைச்சர் பதவி வகித்தவர்கள் அரச குடும்பம், ஜமீன் குடும்பம், பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் ஆகிய தகுதிகளின் அடிப்படையில் இப்பதவியை வகித்தனர். ஆனால் ஓமந்தூரார் எளிய விவசாய குடும்பத்திலிருந்து இப்பதவிக்கு வந்தவர் ஆவார். இவர் எளிமையின் அடையாளமாக இருந்தார். இவரது அமைச்சரவை:
    - தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் - கல்வித்துறை,
    - பி. கோபால ரெட்டி - நிதித்துறை,
    - எம். பக்தவத்சலம் - பொதுப்பணி, தகவல் துறை,
    - டாக்டர் ப. சுப்பராயன் - போலீஸ், சட்டத்துறை,
    - டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் - உணவுத்துறை,
    - ஹெச். சீதாராம ரெட்டி - தொழில்துறை,
    - கே. சந்திரமௌலி - உள்ளாட்சித்துறை,
    - டேனியல் தாமஸ் - மதுவிலக்குத்துறை,
    - கே. மாதவ மேனன் - விவசாயத்துறை,
    - காலா வெங்கட்ராவ் - நிலவருவாய்த்துறை,
    - ஏ.பி. ஷெட்டி - சுகாதாரத்துறை,
    - வி. கூர்மையா - கிராமப்புற வளர்ச்சித்துறை.
- இந்தியா விடுதலை அடையும் பொழுது (1947 ஆகஸ்ட் 15) சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக ஓமந்தூரார் இருந்தார். அப்பொழுது **புனித ஜார்ஜ் கோட்டையில்** (Fort St. George) தேசியக் கொடியை ஏற்றினார்.

## சாதனைச் சட்டங்கள்

- **1928** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் வகுப்புவாரி இடஒதுக்கீட்டில் **1946** இல் முதலமைச்சராக பதவியேற்ற **டி. பிரகாசம்** சில மாற்றங்களை கொண்டு வந்தார். இது சமூக நீதிக்கு எதிரானது என கருதிய ஓமந்தூரார் மேற்படி பிரகாசம் செய்தவற்றை ரத்து செய்து வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை உறுதியாக நடைமுறைப்படுத்தினார். இதனால் இவர் **"தாடி இல்லாத ராமசாமி (பெரியார்)"** என அழைக்கப்பட்டார்.
- இவரின் ஆட்சியில் 1947 ஜூன் 5 இல் **குற்றப் பரம்பரைச் சட்டம்** ஆனது விலக்கிக் கொள்ளப்பட்டது.
- இவரின் ஆட்சிக் காலத்தின் பொழுது **'தேவதாசி முறை ஒழிப்புச்சட்டம் 1947'** ஆனது நிறைவேற்றப்பட்டது.
    - கோவில்களில் இளம் பெண்களுக்கு பொட்டு கட்டுதல் என்னும் பெயரில் சேவைப்பணி அளிக்கப்பட்டது. இது பெண்ணடிமைத் தளத்தில் ஒரு அவல நிலை என்று கருதப்பட்டது.
    - இறைப்பணி செய்யும் இவர்களை **தேவரடியார்கள் (தேவதாசிகள்)** என்று அழைத்தனர். இது குறிப்பிட்ட பெண்களை அவமரியாதைக்கு உள்ளாக்கியது.
    - இச்சட்டமானது முந்தைய ஆட்சியில் கொண்டு வரப்பட்ட தேவதாசி ஒழிப்புச் சட்டத்தில் காணப்பட்ட சில குறைபாடுகளை நீக்கி நிரந்தரமாக தேவதாசி முறையை ஒழிப்பதற்கு 1947 அக்டோபர் 9 இல் ஓமந்தூரார் அவர்களால் கொண்டுவரப்பட்டது. இது நிறைவேற்றப்பட்டு 1947, நவம்பர் 1 முதல் நடைமுறைக்கு வந்தது.
- மடங்கள், கோயில்களின் சொத்துகளைப் பாதுகாக்க **இந்து சமய அறநிலையச் சட்டம்** ஒன்றை இவர் கொண்டு வந்தார்.
- இவரின் ஆட்சியில் 1948 இல் ஜமின்தாரி முறை ஒழிக்கப்பட்டு அதற்கு பதிலாக ரயத்துவாரி முறை கொண்டு வரப்பட்டது.
- சென்னை மாகாணத்தின் குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் தான் மதுவிலக்கு நடைமுறையில் இருந்தது. இவரின் ஆட்சியில் **அனைத்து மாவட்டங்களுக்கும் மது விலக்கு** நடைமுறைப்படுத்தப்பட்டது.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterials

- இந்தியாவிலேயே முதல்முறையாக மாகாண அரசின் பயன்பாட்டிற்காக **de Havilland Dove** என்ற தனிவிமானத்தை வாங்கியவர் ஓமந்தூரார்.

- **போலோ நடவடிக்கை** (Operation Polo) மூலம் ஹைதராபாத் ஆனது **1948 செப்டம்பர் 17** இல் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. அப்பொழுது இந்நிகழ்விற்கு உதவியும் ஆலோசனையும் வழங்கிய சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த ஓமந்தூராரை உள்துறை அமைச்சர் **சர்தார் வல்லபாய் பட்டேல்** மனம் திறந்து பாராட்டினார்.

## ஆதிதிராவிட நலத்துறையின் தந்தை

- வரலாற்று சிறப்பு மிக்க **'ஆலய நுழைவுச் சட்டம், 1947'** ஆனது இவரின் காலத்தில் நிறைவேற்றப்பட்டது.
    - இச்சட்டமானது தாழ்த்தப்பட்டோர் உட்பட அனைத்து சமூக மக்களும் கோவிலுக்கு சென்று வழிபட வழிவகை செய்தது.
    - இச்சட்டத்தை மீறுவோருக்கு **சட்டப்படி தண்டனை** என்று குறிப்பிடப்பட்டிருந்தது.
    - இச்சட்டமானது இராஜாஜியின் ஆட்சியின் பொழுது 1939 – இல் இயற்றப்பட்ட **ஆலய நுழைவு மற்றும் இழப்பீட்டுச் சட்டத்தில்** காணப்பட்ட சில குறைகளை நிவர்த்தி செய்தது.

- அரசாங்க நிலங்களை பொது மக்களுக்கு வழங்கும் போது ஆதிதிராவிடர்களுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற நடைமுறையை **அரசாணையாகப்** பிறப்பித்தார் ஓமந்தூரார்.

- இவரின் ஆட்சியின் பொழுது **'ஆதிதிராவிட நலத்துறை'** உருவாக்கப்பட்டது. இவர் **"ஆதிதிராவிட நலத்துறையின் தந்தை"** என அழைக்கப்படுகிறார்.

## தமிழ்ப்பற்று

- ஓமந்தூரார் ஆட்சியின் பொழுது 1948 இல் **திருச்சிராப்பள்ளியில்** தான் முதன்முதலாக மாவட்ட அளவில் அலுவலகங்களில் **தமிழ் ஆட்சிமொழியாக** நடைமுறைப்படுத்தப்பட்டது.

- **திருக்குறளை** பள்ளிகளில் **கட்டாயப் பாடமாக** ஆக்கியவர் ஓமந்தூரார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsaexamsmaterias

- இவரின் ஆட்சியில் தான் சிறந்த தமிழ் நூல்களுக்கு **அரசின் பரிசு வழங்கும் திட்டம்** தொடங்கப்பட்டது.
- சட்டமன்றத்தில் **ஆஸ்தான கவிஞர்** (அரசவைக் கவிஞர்) என்ற பதவியை கொண்டு வந்தவர் ஓமந்தூரார் ஆவார்.
    - **நாமக்கல் இராமலிங்கனார்** முதலாவது ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டார்.
- ஓமந்தூரார் ஆட்சியில் 1948 நவம்பர் 23 இல் ஒரு அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி
    - தமிழ்நாட்டுக் கோயில்களில் இறைவன், இறைவியின் திருப்பெயர்கள் தமிழ்ப் பெயராக மாற்றப்பட வேண்டும். கோயில்களின் முன்வாசல், கோபுர முகப்பு ஆகியவற்றில் தமிழே இடம்பெற வேண்டும்.
- தமிழக அரசின் **இலச்சினையாக** (Emblem) உள்ள **'கோபுரம் சின்னமானது'** ஓமந்தூரார் முதலமைச்சராக இருந்த பொழுது **1948** இல் முடிவு செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனை வரைந்தவர் மதுரையைச் சேர்ந்த ஓவியர் **ஆர். கிருஷ்ணராவ்.** இது குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்த பொழுது அதிகாரப்பூர்வமாக பயன் பாட்டிற்கு வந்தது.
- இவரின் ஆட்சியில் 1949 இல் **தேசியக்கவி பாரதியாரின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.**
- ஒருமுறை **திருப்பதிக்கு** சென்ற ஓமந்தூரார் பொது மேடையில் பேசும் பொழுது "எனது முன்னோர்கள் தெலுங்கு மொழி பேசுபவர்களாக இருந்தனர். ஆனால் **நான் தமிழன் எனது தாய்மொழி தமிழ்**" என பெருமையுடன் வெளிப்படையாக அறிவித்தார்.
- இன்றும் தமிழகத்தின் மேடைகளில் பேச்சாளர்கள் தமது உரையை தொடங்கும்முன் பயன்படுத்தும் **"பெரியோர்களே தாய்மார்களே"** என்னும் வழக்கத்தை **முதன்முதலில்** கையாண்டவர் ஓமந்தூரார்.

## வள்ளலார் வழியில் உத்தமர்

- முதலமைச்சர் பதவியில் இருந்து அரசியல் நெருக்கடி காரணமாக **1949 ஏப்ரல் 6** இல் விலகிய பின்னர் **அரசியலமைப்பு நிர்ணய சபையின்** உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterials

- ஓமந்தூரார் குன்றக் குடியில் 1951 ஆம் ஆண்டு நடந்த **சைவ சித்தாந்த மாநாட்டிற்கு** தலைமை வகித்தார்.
- அரசியல் வாழ்விலிருந்து விலகி மனித சமத்துவம் பேசிய **வள்ளலார் இராமலிங்க அடிகளின்** கருத்துகளைப் பின்பற்றி கடலூர் மாவட்டம் **வடலூருக்கு** 1951 ஆம் ஆண்டு சென்று வசிக்கத் தொடங்கினார். மீண்டும் வேளாண் தொழிலை செய்யத் தொடங்கினார். தனது இறுதிகாலம் வரை வள்ளலாரின் வழியில் வடலூரிலேயே வாழ்ந்தார். வடலூரில் இவர் உருவாக்கியவை.
  - சுத்த சன்மார்க்க நிலையம்
  - வள்ளலார் குருகுலப்பள்ளி
  - அப்பர் அனாதைகள் மற்றும் ஏழை மாணவர் இல்லம்
  - அப்பர் சான்றோர் இல்லம்
  - ராமலிங்கத் தொண்டர் இல்லம்
- 1967 இல் கோவையில் நடந்த **விவேகானந்தர் நூற்றாண்டு** விழாவிற்கு தலைமை ஏற்றார்.
- ஓமந்தூரார் 1970 ஆகஸ்ட் 25 இல் காலமானார். இவரின் புனித உடல் வடலூரில் அமர்ந்த நிலையில் அடக்கம் செய்யப்பட்டது.
- ஓமந்தூராரைப் பற்றிய தலைவர்களின் மதிப்பீடுகள்
  - **"புனிதமான ஆன்மா"** – ராஜாஜி.
  - **"பட்டைத் தீட்டாத வைரக்கல்"** – நேரு.
  - **"ஓமந்தூர் ராமசாமி அல்ல.... காந்தி ராமசாமி"** - அண்ணா.

* * * * * * * *

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsanexammaterials

SHANKAR IAS ACADEMY™
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)



## இராஜாஜி

SHANKAR IAS ACADEMY
AP-2241, 2nd Floor, 12th Main Road,
Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.
www.shankariasacademy.com
Email : tnpscfeedback@shankarias.in

https://t.me/tamilexammaterials

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 4. இராஜாஜி

### இளம் பருவம்

- இராஜாஜி அவர்கள் 1878 டிசம்பர் 10 இல் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ள தொரப்பள்ளியில் பிறந்தார். இவரின் இயற்பெயர் **இராஜகோபால்**.
- இவர் பிற்காலத்தில் பிரபலம் ஆனவுடன் **இராஜகோபாலாச்சாரியார்** என்றும் அதன் சுருக்கமாக **'இராஜாஜி'** என்றும் அழைக்கப்பட்டார்.
- இவரின் பெற்றோர்: வேங்கடார்யா சக்ரவர்த்தி (Venkatarya Chakravarti) - சிங்காரம்மாள்.
- இவர் கல்வி பயின்ற நிறுவனங்கள்:
  - பெங்களூர் மத்தியக் கல்லூரி.
  - சென்னை மாநிலக் கல்லூரி
  - சென்னை சட்டக் கல்லூரி
- இவர் அலமேலு மங்கம்மாவைத் திருமணம் செய்து கொண்டார்.

### சேலத்து மாம்பழம்

- 1900 ஆம் ஆண்டு இவர் சேலத்தில் வழக்குரைஞர் பணியைத் தொடங்கினார்.
- 1905 இல் வங்காளப் பிரிவினை காரணமாக உருவான சுதேசி இயக்கமானது இவரின் வாழ்க்கைப் பாதையை மாற்றியது.
- 1906 ஆம் ஆண்டு கல்கத்தாவில் **தாதாபாய் நௌரோஜி** தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத் தொடரில் (Congress Session) **வ.உ.சி**, **நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்** ஆகியோருடன் ராஜாஜியும் கலந்து கொண்டார்.
- இவர் 1907 இல் சூரத் காங்கிரஸ் கூட்டத்தொடரில் (Congress Session) கலந்து கொண்டார்.
- 1911 ஆம் ஆண்டு சேலம் நகராட்சி மன்ற உறுப்பினராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilnaduexammaterials

- இவர் 1914 இல் **திருச்சியில்** நடைபெற்ற **சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு** தலைமை வகித்தார்.
    - இவர் **சாதிமறுப்புத் திருமணத்தை** ஆதரித்தார்.
- இவர் 1916 இல் **தமிழ் அறிவியல் சொற்கள் மன்றத்தைத்** (Tamil Scientific Terms Society) துவக்கினார்.
- 1916 இல் அன்னி பெசன்ட் தொடங்கிய தன்னாட்சி இயக்கத்தில் பங்கெடுத்தார்.
- 1917 – 1919 ஆண்டுகளில் சேலம் **நகராட்சி மன்றத் தலைவராக** (Chairman) பணியாற்றினார். அப்பொழுது இவர் முன்னெடுத்தவை:
    - தீண்டாமை ஒழிப்பு
    - சமபந்தி விருந்து
    - பிற்படுத்தப்பட்டோரின் கல்வி மேம்பாடு.
- இவர் சேலம் இலக்கிய மன்றத்தை தோற்றுவித்தார்.
- இவர் **"சேலத்து மாம்பழம்"** என அழைக்கப்பட்டார்.

## விடுதலைப் போராட்டம்

- இவர் 1919 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் ஆனார்.
- இவர் சென்னையில் காந்தியை சந்தித்த பின்னர் வழக்குரைஞர் தொழிலை கைவிட்டார். பின்னர் ரௌலட் சத்யாகிரகத்தில் பங்கேற்றார்.
- 1920 இல் சென்னை மாகாணத்தில் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் (Non Cooperation Movement) இவர் பங்கேற்றார்.
- வேல்ஸ் இளவரசர் 1921 இல் இந்தியாவிற்கு வருகை தந்தார். இதனை எதிர்த்து நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட இராஜாஜிக்கு மூன்று மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது.
    - சிறையில் இருந்து வெளியேவந்த பின்னர் 1922 ஆம் ஆண்டு இவர் **சிறையில் தவம்** என்னும் நூலை எழுதினார்.
- இவர் காங்கிரசின் செயற்குழு உறுப்பினர் ஆக தேர்வு செய்யப்பட்டார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterias

- 1922 இல் காந்தியடிகள் கைது செய்யப்பட்ட பின்னர் அவரின் இதழான **யங் இந்தியாவை** (Young India) நடத்தும் பொறுப்பு இராஜாஜிக்கு வழங்கப்பட்டது.
- 1922 இல் காங்கிரஸ் பிளவுப்பட்ட **கயா கூட்டத் தொடரில்** (Gaya Congress Session) கலந்து கொண்ட இவர் காந்தியடிகளைப் பின்பற்றி **"மாற்றம் வேண்டாதோர்"** (No - changers) பக்கம் நின்றார். இதிலிருந்து இவர் தேசிய அரசியலில் முக்கிய பங்காற்றினார்.
- இவர் வைக்கம் சத்யாகிரகத்தில் (1924) பங்கேற்றார்.
- இவர் 1924 இல் **திருச்செங்கோடு** அருகே உள்ள **புதுப்பாளையத்தில்** காந்தியின் சபர்மதி ஆசிரமத்தை மாதிரியாகக் கொண்டு ஒரு ஆசிரமத்தைத் தொடங்கி அதற்கு **காந்தி ஆசிரமம்** எனப் பெயரிட்டார்.
    - இந்த ஆசிரமத்திற்கு தேவையான நிலத்தை வழங்கியவர் **ரத்தினசபாபதி**.
    - மதுவிலக்கினை குறிக்கோளாக கொண்டு **விமோசனம்** என்னும் தமிழ் இதழை இவர் இந்த ஆசிரமத்தில் இருந்து 1929 இல் வெளியிட்டார்.
        - இதன் ஆசிரியர் **கல்கி கிருஷ்ணமூர்த்தி**.
    - அதே போல் மதுவிலக்கை வலியுறுத்தி இவர் வெளியிட்ட ஆங்கில இதழ் **"Prohibition"** ஆகும்.
- 1930 இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் **தலைவராக** இராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- காந்தியடிகளால் **எனது மனசாட்சியின் காவலன்** (My Conscience Keeper) என அழைக்கப்பட்டார்.

## வேதாரண்யம் உப்பு சத்யாகிரகம்

- 1930 மார்ச் 12 இல் காந்தியடிகள் புகழ்பெற்ற தண்டி யாத்திரையை தொடங்கி ஏப்ரல் 6 இல் உப்புச் சட்டத்தை மீறினார். இது உப்பு சத்யாகிரகம் என அழைக்கப்பட்டது.
    - தமிழ்நாட்டில் உப்பு சத்யாகிரகத்தை நடத்துவதற்காக ராஜாஜி அவர்கள் மதுரைக்கு சென்று **வைத்தியநாதர்** மற்றும் **மதுரை காந்தி** என அழைக்கப்பட்ட **என்.எம்.ஆர். சுப்பாராமன்** ஆகியோருடன் ஆலோசனை நடத்தி அதற்கு களமாக வேதாரண்யத்தை முடிவு செய்தார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterias

- இதன்படி ராஜாஜி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட **99 காங்கிரஸ் தொண்டர்களுடன்** திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யத்திற்கு **1930 ஏப்ரல் 13** இல் உப்பு சத்யாகிரக யாத்திரையை தொடங்கினார்.
- சத்யாகிரகிகள் வழிநெடுகிலும் **பாரதியார்** எழுதிய **"அச்சமில்லை"** என்ற பாடலை பாடிச் சென்றனர்.
- இந்த யாத்திரைக்கென்றே **நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது"** என்ற பாடலை எழுதிக் கொடுத்தார்.
- சத்யாகிரகிகள் 1930 ஏப்ரல் 28 இல் வேதாரண்யத்தை அடைந்தனர்.
- ராஜாஜி தன்னுடன் சில சத்யாகிரகிகளை அழைத்துக் கொண்டு வேதாரண்யம் அருகே உள்ள **அகஸ்தியம் பள்ளி** என்ற கடலோர கிராமத்தில் உள்ள உப்பளத்தை அடைந்து சட்டத்தை மீறி உப்பை அள்ளினார். அதனால் ராஜாஜி கைது செய்யப்பட்டார்.
- இராஜாஜியின் கைதுக்கு பின்னர் வேதாரண்யம் உப்பு சத்யாகிரகத்தை தலைமை தாங்கி வழி நடத்தியவர்கள்
    - க. சந்தானம்.
    - மட்டப்பாறை வேங்கட்ராமன்
    - கே. சுப்ரமணியம்
    - ஜி. ராமச்சந்திரன்
- வேதாரண்யம் உப்பு சத்யாகிரகம் சுமார் **ஒன்றரை மாத காலம்** நடந்தது.
- வேதாரண்யம் உப்பு சத்யாகிரகத்தில் கலந்து கொண்ட முக்கியத் தலைவர்கள்
    - சர்தார் வேதரத்தினம்
    - சி. சுவாமிநாதன்
    - T.S.S. ராஜன்
    - ருக்மணி லட்சுமிபதி

➢ 1932 இல் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் **பொறுப்புத் தலைவராக** (Acting President) பதவி வகித்த இராஜாஜி 1932, செப்டம்பர் 24 இல் **பூனா ஒப்பந்தம்** (Poona Pact) கையெழுத்தாக முக்கியப் பங்காற்றினார்.

- இதில் கையெழுத்திட்டவர்கள் காந்தி மற்றும் அம்பேத்கர்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterias

- இராஜாஜி தனது மகள் லட்சுமியை காந்தியடிகளின் மகன் தேவதாஸ் காந்திக்கு திருமணம் செய்து கொடுத்தார்.

  - 1935 இல் **திருச்செங்கோட்டில்** ஆதிதிராவிட மாணவர்கள் கல்வி பெற **ஒரு விடுதியை** உருவாக்கினார்.

## ஆட்சியமைத்தல் (முதல்முறை)

- 'இந்திய அரசுச் சட்டம் 1935' ன் படி 1937 இல் சென்னை ராஜதானியில் (Madras Presidency) நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியானது முதல்முறையாக போட்டியிட்டு மொத்தமுள்ள 215 இடங்களில் காங்கிரஸ் 159 யை வென்றது. ராஜாஜி 1937 ஜூலை 15 இல் முதலமைச்சர் ஆனார். இவரின் அமைச்சரவை:

  - டி. பிரகாசம்
  - பி. சுப்பராயன்
  - வி.வி. கிரி
  - பெசவாடா கோபால ரெட்டி
  - டி.எஸ்.எஸ். ராஜன்.
  - யாகூப் ஹாசன் சேத்
  - முனுசாமி பிள்ளை
  - எஸ். ராமநாதன்
  - கோங்கட்டி ராமன் மேனன்

- 1938 இல் இவர் இயற்றிய **"விவசாய கடன் தள்ளுபடிச் சட்டம்"** (Agriculture Debt Relief Act) ஆனது விவசாயிகளின் துயரைத் துடைத்தது.

- ஜமீன்தார் முறையை ஒழிப்பதற்கு வருவாய்த்துறை அமைச்சர் **டி.பிரகாசம்** தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். இக்குழுவின் பரிந்துரையானது பிற்காலத்தில் ஆட்சிக்கு வந்தவர்களால் நிறைவேற்றப்பட்டது.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsanexammaterias

- 1939 இல் இவர் இயற்றிய **ஆலய நுழைவு மற்றும் இழப்பீட்டுச் சட்டம்** (Temple Entry Authorisation and Indemnity Act) ஆனது ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் கோவிலுக்கு செல்வதற்கான சட்ட உரிமையை வழங்கியது.
  - **வைத்திய நாதர், L.N. கோபால சாமி** ஆகியோர் **மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில்** இதனை நடைமுறைப்படுத்தினர்.
- மாகாணத்தில் முதல்முறையாக **மதுவிலக்கு** (Prohibition) **சேலம் மாவட்டத்தில்** 1937 அக்டோபர் 1 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.
  - மதுவிலக்கினால் அரசிற்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்ட **விற்பனை வரி** (Sales Tax) அறிமுகப்படுத்தப்பட்டது.
  - இந்த வரியானது ஆசியாவிலேயே **முதல்முறையாக** இராஜாஜியால் கொண்டுவரப்பட்டது.
- இவரின் ஆட்சியின் பொழுது 1938 இல் சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவப்பள்ளியானது **ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியாக** மேம்படுத்தப்பட்டது.
- 1938 - 39 கல்வியாண்டில் சென்னை மாகாணத்தின் தமிழகப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் **தமிழே பயிற்று மொழி** என ராஜாஜி அறிவித்தார்.
- பள்ளிகளில் காந்தியின் **வார்தா கல்வித் திட்டம்** (Wardha Scheme of Education) ஆனது இவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1938 இல் தமிழகப் பள்ளிகளில் 6 – 8 வரையிலான வகுப்புகளில் இரண்டாவது மொழிப் பாடமாக இந்தியை இவர் கட்டாயமாக்கினார். இது தமிழகத்தில் மிகப்பெரிய எதிர்ப்பை கொடுத்தது. தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவங்கியது.
- 1939 செப்டம்பர் 1 இல் துவங்கிய இரண்டாம் உலகப் போரில் ஆங்கிலேய அரசு இந்தியத் தலைவர்களை கலந்து ஆலோசிக்காமல் இந்தியாவை இந்தப் போரில் ஈடுபடுத்தியது. இதன் காரணமாக அனைத்து மாகாணங்களில் காங்கிரஸ் பதவி விலகியது.
  - இராஜாஜியின் அமைச்சரவை **1939 அக்டோபர் 29** இல் பதவி விலகியது.
- **இந்திய பாதுகாப்பு விதிகளின்படி** (Defence of India Rules) ராஜாஜி கைது செய்யப்பட்டு **ஓராண்டு காலம்** சிறையில் அடைக்கப்பட்டார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterials

- 1942 ஏப்ரல் மாதம் ராஜாஜி தலைமையில் சென்னை மாகாண காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். அது **சென்னைத் தீர்மானம்** என அழைக்கப்பட்டது. அதன்படி
  - முஸ்லீம் லீக்கின் தனிநாடு (பாகிஸ்தான்) ஆதரவு
  - மத்தியில் தேசிய அரசாங்கம், மாநிலங்களில் கூட்டணி அரசாங்கம் அமைப்பது.
- இவர் 1942 ஆம் ஆண்டு தொடங்கிய வெள்ளையனே வெளியேறு போராட்டத்தை (Quit India Movement) எதிர்த்தார். இதனைத் தொடர்ந்து காங்கிரசில் இருந்து வெளியேறினார்.
- 1944 இல் ராஜாஜி வெளியிட்ட அரசியல் கருத்தானது **"சி.ஆர். வழிமுறை"** (C.R. Formula) என அழைக்கப்பட்டது. அவை
  - முஸ்லீம்களின் தனிநாடு கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளுதல்.
  - முஸ்லீம் லீக் இந்திய விடுதலைக்கு காங்கிரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.
- 1945 இல் காங்கிரஸ் கட்சியில் இவர் மீண்டும் இணைந்தார்.

## சாணக்கியர்

- 1946 இல் மத்தியில் உருவாக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் (Interim Government) இவர் அமைச்சர் ஆனார்.
  - இவர் வகித்த இலக்கா: முதலில் **தொழிற்துறை** பின்னர் **கல்வி மற்றும் கலைகள்**.
- 1944 முதல் 1946 வரை வங்காளத்தின் ஆளுநராக இருந்த ரிச்சர்டு கேசே ராஜாஜியை **இந்தியாவின் விவேகமான மனிதர்** (The Wisest man in India) என்று அழைத்தார்.
- இந்திய விடுதலையின் பொழுது உருவாக்கப்பட்ட **மேற்கு வங்காளத்தின் முதல் ஆளுநராக** (First Governor) ராஜாஜி நியமிக்கப்பட்டார்.
- இவர் 1947 நவம்பரில் சில நாட்கள் பொறுப்பு தலைமை ஆளுநராக (Acting Governor - General) நியமிக்கப்பட்டார்.
- சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக இருந்த மௌன்ட் பேட்டனைத் தொடர்ந்து 1948 இல் ராஜாஜி அவர்கள் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்றார். முதலும்



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterias

கடைசியுமாக **இப்பதவியை வகித்த ஒரே இந்தியர்** இவர் மட்டுமே ஆவார். (1948 ஜூன் 21 முதல் 1950 ஜனவரி 26).

- இந்தியாவானது குடியரசு நாடாக அறிவிக்கப்பட்ட பிறகு நேருவின் அமைச்சரவையில் **இலக்கா இல்லாத அமைச்சராக** சிலகாலம் இருந்தார். 1950 டிசம்பர் 15 இல் சர்தார் வல்லபாய் பட்டேல் காலமானதும் அவர் வகித்த உள்துறை அமைச்சர் பொறுப்பை ராஜாஜி ஏற்றுக் கொண்டார். பிறகு நேருவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தானாகவே அமைச்சர் பொறுப்பில் இருந்து ராஜாஜி விலகிக் கொண்டார்.
- இவரின் அரசியல் அறிவு காரணமாக **சாணக்கியர்** என போற்றப்படுகிறார்.

## ஆட்சியமைத்தல் (இரண்டாம் முறை)

- 1952 சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலின் முடிவில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத பொழுது அப்போதைய மாகாண ஆளுநர் ஸ்ரீபிரகாசாவின் அழைப்பின் பேரில் சில கட்சிகளின் கூட்டணியுடன் 1952 இல் ஏப்ரல் மாதம் முதலமைச்சராக இராஜாஜி பொறுப்பேற்றார். இராஜாஜியின் அமைச்சரவை
    - ஏ.பி. ஷெட்டி
    - சி. சுப்ரமணியம்
    - கே. வெங்கடசாமி நாயுடு
    - என். ரெங்கா ரெட்டி
    - எம்.வி. கிருஷ்ண ராவ்
    - வி.சி. பழனிச்சாமி கவுண்டர்
    - யு. கிருஷ்ணராவ்
    - ஆர். நாகனகௌடா
    - என். சங்கர ரெட்டி
    - எம்.ஏ. மாணிக்கவேலு
    - கே.பி. குட்டி கிருஷ்ணன்



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexamaterias

- சண்முக ராஜேஸ்வர சேதுபதி
- பட்டாபிராம ராவ்
- டி. சஞ்சீவையா.
- சட்டபேரவைத் தலைவர்: **சிவசண்முகம்**.

➢ 1952 ஜூன் 30 இல் சுதந்திர இந்தியாவில் முதல் முறையாக சென்னை மாகாண சட்ட பேரவையில் **நம்பிக்கைத் தீர்மானம்** (Confidence Motion) கொண்டு வரப்பட்டது.

- இது ஆளும் அரசினால் கொண்டு வரப்படுவது ஆகும்.
- **நம்பிக்கை இல்லா தீர்மானம்** (No Confidence Motion) பெரும்பாலும் எதிர்க் கட்சியினரால் கொண்டு வரப்படுவதாகும்.

➢ 1952 இல் இவர் கொண்டு வந்த **பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்** (Pannaiyal/Tenants Protection Act) ஆனது தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு குத்தகை நிலத்தின் மீது இருந்த உரிமையை உறுதி செய்தது.

➢ இவர் ஆட்சியில் பாரம்பரிய நெசவுத் தொழிலை செய்து வந்த நெசவாளிகளின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன. இவர் செய்தவை:

- நெசவாளர் கூட்டுறவு சங்கம் துவக்கம்
- கைத்தறி குழுமங்கள் (Handlooms Boards) ஏற்படுத்துதல்
- கதர் - கிராமக் கைத்தொழில் ஆணையத்தை பலப்படுத்துதல்.
- இதன் காரணமாக ராஜாஜியின் ஆட்சிக் காலம் **கைத்தறி நெசவாளர்களின் பொற்காலம்** என அழைக்கப்பட்டது.

➢ இவர் ஆட்சியின் பொழுது 1953 இல் சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திராவானது மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு தனி மாநிலமானது. **(தலைநகரம் - கர்நூல்).**

- அப்பொழுது ஆந்திரர்கள் சென்னை மீது உரிமைக் கொண்டாடினர். அதனை மறுத்த இராஜாஜி **"சென்னை தமிழ்நாட்டிற்கு சொந்தம்"** எனக் கூறி தலைநகரம் கைமாறாமல் இருக்க வழிவகை செய்தார்.

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilexammaterials

- ராஜாஜி கல்விச் சீர்திருத்தம் என்ற வகையில் **"மாறுபட்ட தொடக்க கல்வித் திட்டம்"** (The Modified Scheme of Elementary Education) என்பதை தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார்.
  - அப்பொழுது கல்வி அமைச்சர் - **சி. சுப்ரமணியம்**.
  - இது மாணவர்களுக்கு முழுநாள் பள்ளிக்கு பதிலாக **4 மணி நேர பள்ளிப் படிப்பை** அறிமுகப்படுத்தியது.
  - மாணவர்கள் பள்ளி நேரம் தவிர மீதமுள்ள ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ளல்.
  - பெரியார், அண்ணா ஆகியோர் இதனைக் **குலக்கல்வி** என்றும், **சாதிக்கல்வி** என்றும் விமர்சித்தனர்.
- இராஜாஜியின் கல்வித் திட்டமானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதன் தொடர்ச்சியாக 1954 இல் இவர் பதவி விலகினார்.
- **1954 ஜனவரி 2** இல் இந்தியாவின் உயரிய விருதான **'பாரத ரத்னா'** ஏற்படுத்தப்பட்டது.
  - இதனைப் பெற்ற **முதல் நபர் இராஜாஜி**.

இவருடன் பாரத ரத்னாவை பெற்ற மற்ற இருவர்:

- எஸ். ராதா கிருஷ்ணன், 'சர்' சி.வி. ராமன்.

## மூதறிஞர்

- காங்கிரசை விட்டு வெளியேறிய ராஜாஜி அவரைப் போன்ற அதிருப்தியாளர்களைக் கொண்டு **காங்கிரஸ் சீர்திருத்தக் குழு** (Congress Reform Committee) என்னும் கட்சியை 1957 இல் உருவாக்கினார்.
  - இதன் தலைவர் **கே.எஸ். வெங்கட கிருஷ்ணன்**.
  - இக்கட்சியானது 1957 சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு சில இடங்களைப் பெற்றது.
- 1959 ஆம் ஆண்டு சென்னையில் இராஜாஜி அவர்கள் **சுதந்திரா கட்சியை** (Swatantra Party) தோற்றுவித்தார்.



SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsaexammaterias

- **எ.ஜி. ரங்கா** (கட்சியின் முதல் தலைவர்)
- **மினோ மசானி** (பொதுச் செயலாளர்)
- இதர முக்கிய தலைவர்: **முராரி வைத்யா**
- இது காங்கிரசுக்கு மாற்றாக உருவாக்கப்பட்ட ஒரு **வலது சாரி கட்சியாக** கருதப்பட்டது.
- நேருவின் **"லைசன்ஸ் - பெர்மிட் - ராஜை"** (License – Permit – Raj) முடிவுக்கு கொண்டு வருவதே இக்கட்சியின் நோக்கமாக இருந்தது.
- இக்கட்சியை **இனநலக் கட்சி** என்றார் பெரியார்.
- இக்கட்சியின் சார்பாக **சுயராஜ்யா** எனும் ஆங்கில இதழ் மூலம் தனது கருத்துகளை இராஜாஜி தெரிவித்தார்.
    - இதன் ஆசிரியர் **காசா சுப்பா ராவ்.**

➢ இவர் **காந்திய அமைதி இயக்கம்** சார்பாக உலக அமைதிக்காக அணு ஆயுத பயன்பாட்டை நிறுத்தி வைக்க 1962 இல் அமெரிக்க அதிபர் ஜான்.எப். கென்னடியை வெள்ளை மாளிகையில் சந்தித்தார்.

➢ 1962 சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் இக்கட்சியானது அண்ணாவின் திமுகவுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. பின்னர் 1967 தேர்தலிலும் இக்கூட்டணி நீடித்தது.

- இவரை **மூதறிஞர்** என **அண்ணா** முதன்முதலில் அழைத்தார்.

➢ 1938 இல் சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த ராஜாஜி தமிழகப் பள்ளிகளில் இந்தியை கொண்டு வந்தார். ஆனால் 1965 ஆம் ஆண்டு தமிழகத்தில் மாணவர்களால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்ட பொழுது மாணவர்களுக்கு ஆதரவாகவும் இந்தி திணிப்புக்கு எதிராகவும் ராஜாஜி பேசினார்.

➢ 1971 தேர்தலில் இவர் காமராசரின் தலைமையிலான "காங்கிரஸ் (O)" உடன் கூட்டணி வைத்து தேர்தலை எதிர்கொண்டார்.



SHANKAR IAS ACADEMY https://t.me/tamilexammaterials

## இலக்கியப் பங்களிப்பு

- கல்கி இதழில் ராமாயணத்தை மையப்படுத்தி இவர் எழுதிய தொடரானது **'சக்கரவர்த்தி திருமகன்'** என்னும் நூலாக வெளிவந்தது. இந்நூலிற்கு 1958 இல் **சாகித்திய அகாதமி விருது** அளிக்கப்பட்டது.
- இவர் எழுதிய நூல்கள்
    - திருமூலர் திருமொழி
    - சோக்கிரதர்
    - குடிகெடுக்கும் கள்
    - திக்கற்ற பார்வதி.
    - வியாசர் விருந்து (மகாபாரதம்)
    - கண்ணன் காட்டிய வழி (பகவத் கீதை).

  இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவை
    - திருக்குறள் (1965)
- இவர் அணு ஆயுத சோதனையை எதிர்த்து **Mankind Protests** என்னும் நூலை எழுதியுள்ளார்.
- இராமகிருஷ்ண பரமஹம்சரை குறித்து இவர் **ஸ்ரீஇராமகிருஷ்ணா உபநிடதம்** என்னும் நுலை எழுதியுள்ளார்.
- இவர் எழுதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பாடிய **"குறை ஒன்றும் இல்லை"** என்னும் பாடலானது மிகவும் புகழ்பெற்றது.
- 1972 டிசம்பர் 25 இல் ராஜாஜி காலமானார்.

* * * * * * * *

SHANKAR IAS ACADEMY
https://t.me/tamilsanexammaterias